



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீங்கள் மீண்டும் அட்டன் நகருக்கு வரும்போது
எங்கள் ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்!

உங்களுக்குத் தேவைப்படும்

✶ அலுவலக உபகரணங்கள்

✶ அலுமனியப் பாத்திரங்கள்

✶ எனாமல் பாத்திரங்கள்

✶ பாடசாலைப் புத்தகங்கள்

மற்றும் நவீன சாமான்கள் அனைத்தும் கிடைக்கும்.

பாட்டா - டி.ஐ. - எலாஸ்டோ
காலணிகளும் விற்பனைக்குண்டு.

ரத்ன மாளிகை,
88-மெயின் வீதி,
அட்டன்.

பயிர் 1. ஆகஸ்ட் 1973. கதிர் 2.

# மாவலி

தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—மகாகவி சுப்பிரமணிய பாரதி.

---

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏழாவது ஆண்டு மாநாட்டு மலர் வெளியிடுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டமையால், மாவலி அதிக பக்கங்களுடன் மட்டும் வழமைபோல் வெளிவருகிறது. பல அன்பர்களின் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் முதலியன காலதாமதமாகக் கிடைத்தமையால் இவ்விதழில் இடம்பெற வில்லை. தொடர்ந்து வெளியாகும் மாவலி அவைகளைப் பயன் படுத்தும்.

எமது அடுத்த மாவலியில், தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள் பற்றிய விடயங்கள் இடம்பெறவுள்ளன. தோட்டக்குழுவினரும், மாவட்டக் குழுவினரும் தங்கள் விடயங்களை செப்டம்பர் முதலாந் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைத்திடக் கோரப்படுகிறார்கள்.

இந்த இதழில் தமது விடயங்கள், படங்கள் வரவில்லையே என்று யாருமே ஏமாற்றமடைய வேண்டியதில்லை. அவை நிச்சயம் அடுத்தடுத்த இதழ்களில் வெளியாகும். — ஆ·ர்.

---

குறிப்பு:—
(மாவலியில் வெளிவரும் மதிப்புரைகள் மதிப்பாளரின் கருத்தாகக் கருதப்படும். கதை, கட்டுரை, கவிதைகள் யாரையும் குறிப்பிடுவன அல்ல. வாசிகர் அபிப்பிராயங்கள் வாசிகருடையதே.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஒருமைப்பாடு

**கண்ணீரும், உபாதைகளும் உள்ளவரை எமது சேவை ஓயாது! — நேருஜி**

அரசியல் சமூக கலாச்சார இயக்கங்கள் அவற்றிற்குரிய இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் கொண்டனவாகும். தொழிற் சங்கங்களுக்கும் அந்த உரிமை உண்டு. கொள்கைகள் குறிக்கோள்கள் இலட்சியங்கள் யாவும் அவ் அவ் இயக்கங்களுக்குரிய போக்குகளையும் இலக்குகளையும் உடையன. இந்த இலட்சியங்களை எய்திடும் வரம்புக்குட்பட்டே இவ் இயக்கங்கள் செயல்படுகின்றன. ஆயினும் இதுநாள்வரை அரசியல் ஸ்தாபனங்களும், தொழிற் சங்கங்களும், மனித வாழ்வின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முடிவான விடைகளைக் காணவில்லை.

தொழிற்சங்க இயக்கங்களை ஒழிவு மறைவின்றிக் கூறுவோமானால், அவற்றின் தினசரி நடவடிக்கைகளால் மீண்டும் மீண்டும் தமக்குத்தாமே அவைகள் உயிர்பூட்டிக்கொள்கின்றன. சம்பள உயர்வு, சலுகைகள், இலாபப் பங்கு, வயோதிக காலப் பணம், சேவைக் காலப் பணம், வாழ்க்கை வசதிகள், ஆகியனவற்றைப் பெறுவதே தொழிற்சங்கங்களின் பாரம்பரிய சேவைகளாக இருந்து வருகின்றன. கண்ணீரும், உபாதைகளும் உள்ளவரையில் தொழிற்சங்கத்தின் பணிகள் முடிவடையாது. தொழிலாளரின் கண்ணீரையும் உபாதைகளையும் தொழிலாளியே உணர முடியும் என்ற எண்ணத்துடன் தொழிலாளர் தேசிய சங்கத்திற்கு தொழிலாளியையே தலைவராக்கிட தொ. தே. சங்கச் சிற்பிகள் தீர்மானித்தனர்.

இன்று தொழிலாளர் தேசிய சங்கம் அதன் 7-ம் ஆண்டு மாநாட்டை அட்டன் மாநகரில் நடத்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமது அங்கத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்திட வேண்டியவர்களாக இருக்கிறோம். மகாநாட்டுப் பேச்சு வார்த்தைகளில், தொழில் நீதி மன்றங்களில், ஏனைய தொழில் அரங்கங்களில், நாம் பெற்ற வெற்றி வாய்ப்புக்களை மட்டும் நாம் பெரிதாக எண்ணி மயக்குறாமல், நமது தோல்விகளையும், நமது மக்கள் அவற்றால் எவ்வளவுக்கெவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நமது பலவீனங்களையும், அப் பலவீனங்கள் ஏற்படக் காரணமாக உள்ளவைகளையும், கண்டுபிடித்து அவ்விதப் பலவீனங்கள் மேலும் ஏற்படாதவாறு கவனமாயிருந்திடுதல் நமக்கு அவசியமாகும். இந்த வகையில் தோட்டக் குழுக்களும், மாவட்டக் குழுக்களும், பிரதேசச் சபைகளும், தலைமைச் செயலகமும் மிக்க பொறுப்புடையவைகளாகக் கருதப்படுகின்றன.

நமது முன்னே கரடு முரடானதோர் நீண்ட வழி தோனுகிறது. நாம் ஒருமைப்பாட்டுடன் செயல்படாவிட்டால் ஏழைத் தொழிலாள மக்களின் முகங்களில் வழியும் கண்ணீரைத் துடைக்க முடியாதவர்களாகவும் ஆகிடலாம்.



# தொழிலாளர் தேசிய சங்கம்



**ஏ. எஸ். வடிவேலு**
(மாநிலச் செயலாளர்)

**உயர்ந்த இலட்சியங்களை தொ. தே. ச. தனித்துவமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தொழிற்சங்கங்களின் சரித்திரத்தில் புதிய திருப்பத்தை உருவாக்கியுள்ளதும் தொழிலாளர் தேசிய சங்கமே. அதன் சாதனைகளைக் கூறுகிறார் கட்டுரையாளர்.**

1965ம் ஆண்டு மே முதல் நாள், தோட்டத் தொழிலாளர் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும். தொழிலாளர் தேசிய சங்கம் பிறந்த திருநாள் அது. தொழிலாளருக்குப் புதியதோர் சகாப்தத்தை உருவாக்கிய முதல் நாள்.

தேயிலைத் தோட்டத் தொழிலுக்கும், தொழிற்சங்க இயக்கங்களுக்கும் பிறப்பிடமான அட்டனில் அமரர் திரு. வி.கே. வெள்ளையன் அவர்களை வழிகாட்டியாகக்கொண்டு தொழிலாளர்களால் அமைக்கப்பட்டுத் தொழிலாளியையே தலைவராகக் கொண்டு தொழிலாளர் தேசிய சங்கம் தொடங்கப்பட்டது.

தொழிலாளியைத் தலைவராகக் கொண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழிற்சங்கம் இதுதான் என்பதில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஏறத்தாழ ஆறு இலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட மலையகத்தில், சென்ற ஒரு நூற்றாண்டு காலத்தில் தேயிலை உற்பத்தியின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவாயினும், தோட்டத் தொழிலாளரின் பாழ்பட்ட வாழ்க்கை நிலையை மாற்றுவதற்கு எவ்வித கவனமும் செலுத்தப் படவில்லை. எனவே தொழிலாளர் தேசிய சங்கம் தோட்டத்தொழிலாளரின் சுகவாழ்வை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இயங்கத் தொடங்கியது.

முக்கியமாகத் தோட்டத் தொழிலாளரின் நிலை சீரடைவதற்குப் போதிய வருமானமே முதலாவது காரணம் என்பதை நாடறியச் செய்ததுடன், ஏனைய தொழில் துறைகளிலுள்ள தொழிலாளர்களுக்குக் கிட்டும் நீதி, நியாயம், சட்டம், சலுகை, உரிமை ஊதியம் முதலியன தோட்டதொழிலாளருக்கும் கொடுக்கப்பட வேண்டுமென அரசாங்கம் நியமித்த தொழிற்சங்கங்கள் பற்றிய விசாரணைக்குழுவில் சாட்சியமும் அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் சங்கங்களைத் தொழிலாளர்களே தொழிலாளியை தலைமையாகக் கொண்டு நடத்திட சட்டம் கொண்டுவர வேண்டுமென தொழிலாளர் தேசிய சங்கமே எடுத்துக் காட்டியது தொழிலாளிகளுக்கு இலாபத்தில் பங்கும், நிர்வாகத்தில் தலையிடும் உரிமையும் வேண்டுமெனவும் வற்புறுத்தியது.

தொழிலாளர் தேசிய சங்கம், தோட்டத்தொழிலாளரின் வாழ்க்கை வசதிகள், பாதிக்கப்படாதிருந்திட பல சந்தர்ப்பங்களில் செயலாற்றி வெற்றிகண்டுள்ளது.

1967ல் மஸ்கெலியா நீர்த்தேக்கத் துட்பட்டதால் வேலை நீக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நட்ட ஈடும், சேவைக் காலப் பணமும் கோரி தொழில் நீதி மன்றத்தில் வழக்காடியது. இந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்ட தாயினும், முதலாளிகள் சங்கம் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு மனுச்செய்துள்ளது.

அரசாங்கம் சுவீகரிக்கும் தோட்டங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, சேவைகாலப் பணம் பெற்றுக் கொடுப்பதில் தொழிலாளர் தேசிய சங்கம் விழிப்பாக இருக்கிறது.

ஒற்றுமைக்கு வழிவகுக்கும் வண்ணம், தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிலிருந்து நியாயம் காணுவதற்குத் தோழமைத் தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து செயல்படுவதிலும் தொழிலாளர் தேசிய சங்கம் முன்னணியில் விளங்குகிறது.

தோட்டப் பாடசாலைகளை அரசு கையேற்பதிலும், தோட்டப்பிள்ளைகளின் கல்வி நலத்துக்கும் ஆதரவளிப்பதுடன் பேராதனை சர்வகலாசாலையில் உயர் கல்வி பயிலும் தோட்ட மாணவர் ஒருவருக்கும் இந்திய அரசின் கோரிக்கைக்கேற்ப தோட்டப்புற இந்திய வம்சாவளியினத்து மாணவருக்கு பாரதத்தில் உயர் கல்வி யளித்திடும் திட்டத்திற்கும் உதவி நிதி யளித்து ஒரு முன்மாதிரியாகத் தொழிலாளர் தேசிய சங்கம் திகழ்கிறது.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொலிசாரின் துப்பாக்கிக்குப் பலியான நாலந்தத் தோட்டத்து நால்வரின் வழக்கு விசாரணைகளுக்கும் கிரிவான துப்பாக்கிப் பிரயோக வழக்குக்கும் தொழிலாளர் தேசிய சங்கம் சட்டவாதிகளை நியமித்துள்ளது.

காலஞ்சென்ற திரு. வி. கே. வெள்ளையன் அவர்களின் குறிக்கோள்களை தொழிலாளர் தேசிய சங்கம் அயராது செயல்படுத்துவதில் வெற்றிகண்டு வருவது தொழிலாளர் வாழ்வில் ஒரு புதிய சகாப்தம் ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது என்பதற்குப் பெருமை தருவதாகும்.

1971ம் ஆண்டு மார்கழி மாதம் திரு. வெள்ளையன் திடீரென மரணமடைந்தார். அவரது நினைவுச் சின்னத்தை டிக்கோயா அருகில் நிருவியுள்ளது தொழிலாளர் தேசிய சங்கம்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தனித்துவம் சுடர்
(5ம் பக்கம் பார்க்க)



# மலையகச் சமுதாயம்

ச. ஜேசுநேசன்

மலையகச் சமுதாயம் தியாகத்தில் உருவாகியது பிறர் வாழத் தன்னையே அழித்துக்கொண்டிருக்கும் பண்பு பிறழாத பெருமை அதற்குண்டு சந்தனக் கட்டை தன்னையே எரித்துக் கொண்டு நறுமணத்தைப் பரப்புவதைப் போல மலையக மக்கள் மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகத் தங்கள் உரிமைகளைக் கூட இழந்துவிட்டனர்.

மனித சமுதாயத்தை மதிப்பதே தெய்வப்பணி. இதனையே காந்திமகானும் ''தேசசேவையே தெய்வ சேவை'' எனக் கூறினர். மலையக மக்களுக்கு அத்தகைய தேசபக்தி உண்டு. உரிமை இல்லாவிட்டாலும் தான் பிறந்த மண், தாய்நாடு என்று நம்பி மகிழும் தியாகப் பண்பு அவர்களுக்கே சொந்தமான தனித்துவம்.

பாலை நில மானாலும், தாம்பிறந்த நாடாக இருந்தால் அது அவர்களுக்குச் சோலை நிலமே.

இயற்கை வளமும் இணையற்ற எழிலும், பசுமைக்கொழிப்பும் மலையகத்தை அழகுசெய்வதைப் போல் மலையகத்து மக்களின் பண்பாடும், உள்ளத்து ஈரமும், உயர்ந்த நோக்கும், தியாகத்திருவும், அயராத உழைப்பும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தன்மையும் இலங்கை நாட்டுக்கே அணிகலன்களைப்போல் விளங்குகின்றன.

ஆனல் மலையக மக்களின் சமுதாயம் உள்ளத்தால் உயர்ந்து ஒப்புவமை யில்லாத திறன் படைப்பதாயினும், அவர்கள் தொழிலாளர்கள் என்ற காரணத்திற்காக மட்டுமல்லாது, அரசியல் உரிமைகள் இல்லாதவர்கள் என்ற பாகுபாட்டினுல் அல்லலுறும் நிலையால், வேறுபட்டவர்களாகவே கணிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் அடிப்படையில்மலையகச் சமுதாயம் வாங்கியபலத்த அடி பொருளாதார அடிப்படையிலும் அவர்களை வெகுவாகப் பாதித்தது.

## தொ. தே. ச....

4ம் பக்கத் தொடர்ச்சி

விட்டுப் பிரகாசித்திட மலையக எழுத்தாளரும், கவிஞரும் பிரபல தொழிற்சங்கத் தலைவரும், முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. வி. வேலுப்பிள்ளையவர்களையும் முன்னாள் தலைவர் திரு. எஸ். பெருமாள் அவர்களையும் பொறுப்பாளர்களாகக் கொண்டு நாளுக்கு நாள் பெருவளர்ச்சி யடைந்து வருகிறது.

தொழிலாளிரின் சுக வாழ்வுக்காகவே தொழிலாளர் தேசிய சங்கம் தெளிவான பாதையில் வீறுநடை போடுவதை மலையகம் தூய மனதுடன் வரவேற்கிறது; வாழ்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்டின் குடித்தொகையில் பத்து சதவிகிதமாக இருந்தும் எழுபது சதவிகித வெளிநாட்டுசெலாவணியைப் பெற்றுக் கொடுத்தாலும் அவர்கள் ஊதியமோ மிக மிகக் குறைந்ததாகும்.

சமூக அடிப்படையிலான அவர்களின் வளர்ச்சியும் தோட்ட நிர்வாகங்களின் பாராமுகத்தால் பின்னடைந்த நிலையில் தான் இருக்கிறது. தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பு மட்டும் படிக்கும் வாலிபர்கள் உயர்கல்வி பெற முடியாதவர்களாகி விடுகின்றனர். நகர்ப்புறத்தில் வாழும் மலையகச் சமுதாயத்தினரின் பிள்ளைகளிற் சிலர் உயர்கல்வி பெற்றவர்களாக இருப்பினும், விரல்விட்டெண்ணக் கூடிய ஒரு சில பட்டதாரிகளே உருவாகியுள்ளனர்.

தோட்ட நிர்வாகங்கள்,புதிய ஆளெடுப்புகள் செய்யாத காரணங்களாலும் தோட்டத்து வாலிபர்களும், குமரிகளும் உயர்கல்வி பெற முடியாத வறிய நிலையாலும் பட்டிணங்களைச் சேர்ந்து, கடைகளிலும், பங்களாக்களிலும், வேலைக்காரர்களாகவும், ஆயாக்களாகவும் தொழில் புரிகின்றனர். இவர்களிற் பலர் கொடுமைக்குட்படுகிருர்கள் அல்லது வஞ்சிக்கப் படுகிருர்கள்.

மலையகத்தில் சாதிப்பாகுபாடுகள் இருந்தாலும் காட்டுமிராண்டித் தனமான சம்பவங்களை ஏற்படுத்தியதில்லை எல்லோருமே தொழிலாளர்கள் என்ற நிலையிலுைம், சமமாகவே தோட்டத்து லயன்களில் குடியிருப்பதாலும், பாரதூரமான வேற்றுமைகள் தலைதூக்குவதில்லை.

மலையகச் சமுதாயத்தில் நடைபெறும் திருமணங்கள் சீதன முறை அடிப்படையில் இல்லை எனலாம். பெற்ருேர் தம்பெண்ணை மணமுடித்துக் கொடுக்கும் போது அவளது உழைப்புத் திறனையே பெருஞ் செல்வமாகக் கொடுத்திடுவதைக் காணலாம். மலையகத்தில் பெற்ருேர் நிச்சயித்து திருமணங்களே பெரும்பாலும் நடப்பினும், காதற்றிருமணங்களும், குறைந்தளவு கலப்புத் திருமணங்களும், நிகழ்கின்றன.

சமய, கலாச்சார அடிப்படையிலும் மலையக மக்கள் சோடைபோவதில்லை. எத்தனையோ பொருளாதார இடையூறுகள் இருப்பினும், தைப்பொங்கல், தீபாவளி, மற்றும்இதர சமயத்தின் முக்கிய திரு நாட்களைக் களிப்புடன் கொண்டாடி மகிழ்கிருர்கள். மலையகத்தில் கோயிலில்லாத தோட்டமே கிடையாது. பங்குனி, சித்திரை, ஆடி, ஆவணி மாதங்களில் கோயில் திருவிழாக்கள் சிறப்பாகநடைபெறும்.

மலையக மக்கள் ஒரு பெரிய சமுதாயமாகவே இயங்கி வந்தாலும், குடியுரிமை, வாக்குரிமை, மண்ணுரிமை இல்லாதவர்களாகத் தங்களுக்கென நிரந்திரமான இடம் காணுதவர்களாகவே உள்ளனர்.

எத்தனையோ இன்னுயிர்களை இந்நாட்டு உழைப்புக்காகத் தத்தம் செய்து, மலையகத்தையே இலங்கையின் இதயமாக்கிப் பாதுசாத்து வரும் நல்லுளம் படைத்த மலையகச் சமுதாயத்தின் மத்தியில் அகோர தாண்டவமாடும் நாடற்ற நிலை நீங்கும் வரையில் மலையகத்தில் அமைதியும், ஆறுதலும் எப்படி நிலவ முடியும். மலையகச் சமுதாயத்தின் சிறப்பு விழலுக்கிறைத்த நீராகாமலிருந்திடத் திடங்கொண்டு செயல்பட நல்ல மனதுடையவர்கள் முன்வர வேண்டும். மலையக மக்களின் துன்பத்தைத் துடைத்திடும் கரங்கள்தாம் மனித சுதந்திரத்தைப் பாதுகாத்திட இயங்கிட வேண்டும். அந்தப் பொன்னுளில் மலையகச் சமுதாயம் தனக்குவமை இல்லாத பொலிவுடன் திகழும்.

★இலங்கைக் குடியரசு நல்வாழ்வு வளர்ச்சியை அறிமுகப்படுத்தியுள்ளது. ஜனநாயகச் சோஷலிச குடியரசாகும் எங்கள் அரசு பிரஜைகளுக்குப் பூரண சுதந்திர உரிமைகளையும், வயது வந்தவர்களுக்குத் தொழில் கொடுப்பதும், உற்பத்திகளைச் சமபங்கீடு செய்து பிரஜைகளுக்கு வழங்குவதும், பொருளாதாரத்தைக் கட்டிக் காக்கும் சோஷலிச சமுதாயத்தை அமைப்பதும் குறிக்கோள்களாகக் கொண்டு இயங்குகிறது.

அமைச்சர் மைக்கல் சிறிவர்தன

★எங்களது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் சகல பிரச்சினைகளையும் சமாளித்து விடுவோம். பூரணமான வெற்றி பெறுதுவிட்டாலும், எங்களுக்கு மிக அவசியமான பிரச்சினைகளையாவது தீர்த்துக் கொள்ள வழிவகைகளைக் கண்டுவிடுவோம்.

சர்வதேச தொழிற் சபையின் மும்முனைப் பேச்சு வார்த்தைகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குத் தொழில் உதவியும், ஆராய்வு நடத்தவும், தொழிலாளர்களின் தகுதியை சர்வதேசிய தொழிலாளரின்நிலைக்கு உயர்த்தவும் பயன்தருவதாக அமைந்துள்ளது. வறுமை எங்கிருந்தாலும் அதனுல் சகல இடங்களிலும் முன்னேற்றத்திற்கு ஆபத்தேற்படுகிறது என சர்வதேச தொழிற்சட்டம் இயம்புவதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் மைக்கல் சிறிவர்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஜி. என். ஞானமுத்து
(முன்னாள் உதவித் தொழில் கமிஷனர்)

இலங்கையிலிருந்த இந்தியத் தொழிலாளருக்குப் பாதுகாப்பளிக்கு முகமாக இயற்றப்பட்ட சட்டங்களாவன.

1889ம் ஆண்டின் 13ம் இல: தோட்டத் தொழிலாளர் இந்தியர்) சட்டம். (இப்போதைய அதிகாரம் 133)

1923ம் ஆண்டின் 1ம் இல: குடிபுகுந்த (இந்தியர்) தொழிலாளர் சட்டம் (இப்போதைய அதிகாரம் 132)

1927ம் ஆண்டின் 27ம் இல: குறைந்த சம்பள (இந்தியர்) தொழிலாளர் சட்டம் (இப்போதைய அதிகாரம் 135)

1889ம் ஆண்டின் 13ம் இல: தோட்டத்தொழிலாளர் சட்டம் (அதிகாரம் 133) கூறுவதாவது.

6ம் பகுதி— கிழமைக்கு 6 நாள் வேலை. அப்படி வேலை கொடுக்கப்படாவிட்டால் 6 நாளைய சம்பளம் கொடுத்தல். தேயிலை, றப்பர் தோட்டத் தொழிலாளருக்கு 7நாள் வேலை கிடைக்கும் வாய்ப்புகள் உண்டு. சில்லறைத் தொழிலாளருக்கு தொடர்ந்து வேலை கிடைப்பது அரிது. தோட்டத் தொழிலுக்கு அதிகப்படியான தொழிலாளர்கள் இருப்பதால் சில்லறைத் தொழிலாளருக்கு வேலை கொடுத்திட முடியாத நிலையை முதலாளிகள் பயன்படுத்த முடியும். இந்தப் பிரச்சினைக்கு இந்தச் சட்டத்திற்குள் தீர்வு காண முடியாதாகையால் வேறு சட்டங்களை நோக்கவேண்டும்.

9ம் பகுதி— எவ்வளவு தொகையானாலும் கொடுபடாத சம்பளத்திற்காக விண்ணப்ப நீதி மன்றத்தில் வழக்காடலாம். மற்றும்.

10ம் பகுதி— தொழிலாளர்கள் கூட்டாகவும் வழக்காடும் உரிமையுண்டு. தொழில் அலுவலகம் அமைத்திடுமுன் பிருந்தே இந்தச் சட்டம் இருப்பதாயினும். இதனை இன்று முக்கியமாக அனுசரிப்பதில்லை.

19ம் பகுதியின் — குடிமைச் சட்டங்களால் ஒரு தொழிலாளியைப் பணக்கடனிற்காக கைது செய்யவோ தண்டனை கொடுத்திடவோ முடியாது. தொடர்ச்சியான சம்பளம் பெறுமையால் பெருங்கடனுக்குள் வீழும் தொழிலாளிக்கு இந்தச் சட்டம் துணை செய்கிறது. இன்றும் அதைப்போல 218ம் பகுதி குடிமை சட்டத்தின் படி மொத்தத் தொகையாக ரூபா 500/-க் குறைவான கடனை சம்பளத்திலல்லாமலும், உபகரணங்கள் வகையிலல்லாமலும் விட்டுக் கொடுக்கவும் அல்லாவிட்டால் அந்த வர்த்தக ஸ்தாபனத்தைக் கைப்பற்றவும் அதிகாரமளிக்கிறது.

21ம் பகுதி— முதலாளிகள், ஒவ்வொரு மாதமும் 15ந்திகதி தொழிலாளருக்குச் சேரவேண்டிய சம்பளப் பாக்கியை தொழில் ஆணையாளருக்கு அனுப்பக் கோரும் சட்டத்தைக் கொண்டுள்ளது. இந்தச்



சட்டம் தவருக நடக்கும் முதலாளிகளைக் கண்டு பிடித்திட வழிசெய்கிறது.

22ம் பகுதி— முதலாளிகள் தங்களிடம் வேலை செய்யவில்லை என்று மறுக்க முடியாதவாறு பதிவுப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தால் தான் மாதச்சம்பளம் பெறுவோருக்கும் செக்ரோல் பதிவு முறை எற்பட்டது.

23ம் பகுதி— தொழிலாளி வேலையிருந்து விலகினால் அந்த முதலாளி குறிப்பிட்ட பாரத்தில் பற்றுச் சீட்டு கொடுத்திடவேண்டும். தொழிலாளி பற்றுச் சீட்டு பெறும் போது அவனது மனைவி. பிள்ளைகளும் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாக வேவர்களுக்கும் பற்றுச் சீட்டு வழங்கப்படல் வேண்டும். ஆனால் மனைவி, அல்லது பிள்ளை தொடர்ந்து வேலை செய்ய விரும்பினால், முதலாளியிடம் லாக்குறுதி எழுதிக் கொடுத்துத் தொடர்ந்து வேலை செய்லாம்.

ஒரு தொழிலாளி தவருன நடத்தைக்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு வேலை இழந்தால் மனைவியும் கணவனும் பற்றுச்சீட்டுடன் வெளியேற்றப்படுகின்றனர். ஓடிப்போகிறவனும், பற்றுச் சீட்டுப் பெறும் அருகதையுண்டு. அந்தப் பற்றுச் சீட்டில் முதலாளி கையொப்பமிட மறுக்க முடியும். ஒரு காலத்தில் கணவன் வேலை நீக்கம் செய்யப்பட்டால் மனைவியும், பிள்ளைகளும் வேலை நீக்கப்படவேண்டியதென இருந்தாலும் இன்னும் அதே சட்டம் இருந்து கொண்டுதானிருக்கிறது.

25ம் பகுதி— இலங்கைக்குள் வருவதற்கு அடையாளப்பற்றுச் சீட்டு தேவைப்படுவதைப் போல, தொழிலாளர்கள் வேலையில் சேர்வதற்கும், விலகுவதற்கும் பற்றுச்சீட்டு அவசியம். தொழிலாளியின் சொந்த விபரங்கள் அவரது முதல் பதிவான அடையாளப் பற்றுச்சீட்டிலுள்ளவைகளாக இருக்கும்.

24ம் பகுதி— வீட்டுவசதிகள் பற்றியது. ஒரு தொழிலாளி தனது மனைவி, குழந்தைகளுடன் ஒரு அறையில் தங்கலாம். மற்ற ஒரு குடும்பத்துடன் குடியிருக்க வேண்டுமென வற்புறுத்திடவில்லை. இந்தச் சட்டத்தை 1941ம் ஆண்டுவரை கொண்டு வராமலிருந்தது ஆச்சரியமே.

—தொடரும்


---

அச்சம் மனிதனையே அடக்கிவிடுகின்றது. அச்சத்தால் பயங்கர நினைப்புகளும் தோல்வி மனப்பான்மையும் ஏற்படுகிறது. அச்சம் மனிதனைத் தலை கவிழவைக்கிறது. அஞ்சுகிறவன் தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் அச்சத்திற்குள் தள்ளுகிருன். அச்சத்தைக் கண்டிப்புடன் எதிர்த்து நிற்பவனே வெற்றி பெற முடியும். அச்சம் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கோர் பெரிய தடைச்சுவர்.

தன்னம்பிக்கை, துணிவு, உற்சாகம், சகிப்பு, அன்பு. தன்னறிவு ஆகிய ஆறு துணைவரையும் நாமே நமக்குள் நாமாக உருவாக்கிக் கொள்வோமானல் அச்சத்தை அடியோடு ஒழித்து விடக் கூடிய ஆற்றல் நம்முள் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை அழைக்கிறேன்



**த. அய்யாத்துரை**
(தலைவர் தோ. தே. சங்கம்)

சேவைக்காலப் பணமும், ஓய்வு காலப் பணமும் மொத்தமாகக் கிடைத்தால்தான் ஏழைத் தொழிலாளர்கள் செம்மையான வாழ்க்கையைத் திருப்தியுடன் நடத்தலாம். தொ. தே. சங்கத்தின் முயற்சி வெற்றிகளுக்கு மேல் வெற்றிகளை பெற்றுத் தந்துள்ளன என்று தொ. தே. ச. தலைவர் திரு. அய்யாத்துரை கூறுகிறார்.

தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு மொத்தமாக சேவைக்காலப் பணம் கொடுக்கும் விடயத்தில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது.

தொழிலாளருக்கு வயது அடிப்படையில் ஓய்வு காலப் பணமும், உழைப்பின் அடிப்படையில் சேவைக் காலப் பணமும் கிடைத்திட 1970ம் ஆண்டு அட்டன் தொழில் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கிடைத்தது. இந்தத் தீர்ப்பின்படி வேலையிலிருந்து விலகும் வயது சென்ற தொழிலாளர்களுக்கு ஓய்வு காலப் பணமும், தோட்டங்களை விட்டுச் செல்லும்வோருக்கு, சேவைக் காலப் பணமும் கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தீர்ப்பினால் 1967ம் ஆண்டு இ. தொ. காவும் தோட்ட முதலாளிகளின் சம்மேளனமும் செய்து கொண்டிருந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாத நிலை உருவாகியது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் பெரு முயற்சியால், தாயகம் செல்வோரும் தமது சேமிப்பை கொண்டு செல்லும் வாய்ப்பு எழுந்தது.

இதைத் தொடர்ந்து ஏனைய தொழிற்சங்கங்கள், தோட்டங்கள் கைமாறும் போதோ தோட்டங்களை விற்கும் போதோ தொழிலாளர்களுக்கு சேவைச்காலப் பணம் கிடைத்திட வேண்டுமென வேலை நிறுத்தங்களைச் செய்தனவாயினும் தோல்விகளையே பலனாகப் பெற்றன.

தொழிலாளர் தேசிய சங்கம் தனது இலட்சியங்களுக்கு மாசு ஏற்படாவாறு உழைத்ததையால் தோட்டங்களை விட்டு வெளியேற்றப்படும் தொழிலாளர்களுக்குச் சேவைக் காலப் பணமும் நட்டஈடும் கேட்டுத் தொழில் நீதி மன்றங்களில் வழக்குத் தொடர்ந்து வெற்றி கண்டது.

மஸ்கெலியா நீர்த்தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும், ஏவாஹெட்ட பகுதியிலுள்ள தாரஓயா தோட்டத்திலிருந்து வெளியேறிய தொழிலாளர்களுக்கும் 12 500 ரூபா வரையில் வாங்கிக் கொடுக்கப் பட்டது. திரு. வி. கே. வெள்ளையன் அவர்கள் தொழிலாளர்கள் சார்பில் நேரடியாக வாதாடிய தன் விளைவாகக் கிடைத்த வெற்றி இதுவாகும்.

இதனால் முதலாளிகளின் சம்மேளனம் ஒப்பந்தங்களை வைத்துச் சதியாடிய திட்டங்கள் சிதறிப் போகலாயிற்று. இதன் காரணமாக சேவைக்காலப் பண வழக்கின் தீர்ப்பையும் ஏற்காமல உயர் நீதி மன்றத்தில் அப்பீல்கள் செய்திருக்கின்றது. தொழிலாளர் தேசிய சங்கமும் உயர் நீதி மன்றத்தில் இவ்வழக்குகளில் வெற்றி காண வாதாடி வருகிறது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் நியாயமும், நேர்மையுமான போராட்டங்கள் என்றுமே வீழ்ச்சியடைந்ததில்லை. இனிமேலும் எடுத்த காரியங்களில் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொரு தொழிலாளியும் தேசிய, தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்து அதனைப் பலப்படுத்த வேண்டுமென அழைக்கின்றேன்.



---

★ மனிதன் தனது அறிவை மட்டும் பெரிதாக நம்பி உலகத்தையே கட்டி ஆள நினைக்கிறான். தனது அறிவை மற்றவர் மனத்துள் திணித்திட முற்படுகிறான். மற்றவர்களின் இயல் அறிவுத் தாரதரம் பற்றிய எண்ணமே அவனுக்கில்லை. பட்டப்படிப்புச் சான்றிதழ்களை வைத்து அறிவுக்கும் அளவு கோல் செய்கிறான். இயற்கையான அறிவை அளக்க முடியாத மனிதன், தன்னளவில் தனது செயற்கை அறிவுக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, முட்டாள்கள், சுதந்திரமில்லாதவர்கள் என்று மற்றவர்களை வருணிக்கிறான். தன்னையும், தன்சூழலையும் பார்க்காமல் மற்றவனையே பார்க்கிறான். தனக்குத் தானே அடிமையாகி விட்டவன் மற்றவர்களுக்குச் சுதந்திரத்தைக் காட்டித்தர முடியுமா!

★ சொந்த புத்தியும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலும் இல்லாதவர் தன்னம்பிக்கையும், துணிவும் இல்லாதவர்கள். இவர்களை நம்பி எந்தக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. மற்றவர்கள் அறிவில் வாழ நினைப்பவர்கள், மற்றவர்கள் உழைப்பில் களித்திருக்க நினைப்பவர்கள் எந்தப் பெருமையையும் சாதித்திட முடியாது. இவர்கள் சந்தர்ப்பவாதிகளாகவும், காலைவாரிவிடுகிறவர்களாகவுமே இருக்க முடியும்.

★ மனிதன் துன்பப்படும்போது, அவனுக்கு ஆதரவும், ஆறுதலும், அளிப்பதுதான் மனித உறவின் நம்பிக்கையாக இருந்திட வேண்டும். அதிலே சாதி, மத, இனபேதங்களுக்கு இடமிருந்திடக் கூடாது. ஒவ்வொரு மனிதனும் ஆபத்தில் வீழ்ந்தவனுக்கு தந்தையாகவும், சகோதரனாகவும், நண்பனாகவும், திகழவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியாகி இராஜலிங்கம்

(கவி. அ. சிதம்பரநாத பாவலர்)

கற்பனைக்கும் எட்டாத தியாகவீரன்!
காந்தீயத் தத்துவத்தில் திளைத்த ஞானி!
சொற்பெருக்கில் காட்டியதைச் செயலில் நாட்டத்
தொல்லைகளை வாழ்வாக்கிச் சுமன்ற தூயன்!
பிற்போக்கு மக்களிடை புகுந்து நேர்மை
பெரிதனவே தலைவணக்கம் ஏற்ற சான்றோன்!
முற்போக்கர் முன்னணியில் நடந்த ராஜ
லிங்கத்தின் திருநாமம் என்றும்வாழும்.

பாட்டாளர் நல்வாழ்வில் மனதை நாட்டிப்
பணிசெய்யும் வாய்பினுக்காய்த் தனது வாழ்வைக்
கூட்டாமற் துறவியென என்றும் வாழ்ந்த
குணக்கடலான்; உள்ளொளியில் குவிந்த நட்பான்
ஊட்டாத தெளிவெல்லாம் மக்கட் கூட்டி
உள்ளத்தின் புத்துணர்வைக் கிளைக்கச் செய்த
தேட்டாளர் தந்தையென வாழ்ந்த ராஜ
லிங்கத்தின் திருநாமம் என்றும் வாழும்.

மலையாத உள்ளத்திற் கெடுத்துக் காட்டாம்
மனிதர்களின் பண்பாட்டிற் கவனே சான்று
நிலையான கொள்கையிலே வழுவல் இன்றி
நிற்பதிலே இமயம் என்றால் மிகையே அல்ல!
பலநாடும் சென்றுய்ந்தான் மக்கள் வாழ்வும்
பரிணமிக்கச் சேவை செயும் விரதம் பூண்டான்
விலையடங்கா நல்முத்தாம் ராஜலிங்க
வித்தகனின் திரு நாமம் என்றும்வாழும்.



# தோட்டக் குழுவின் முக்கிய அம்சங்கள்



பி.வி. கந்தையா.

**தொழிற்சங்கங்களின் கிளைகளைத் தோட்டங்களில் அமைத்து அந்தக் கிளைகளை நடத்தும் குழுவைத் தோட்டக் கமிட்டி என்று அழைக்கின்றார்கள். தோட்டக் குழுவின் கடமைகளை இக்கட்டுரையில் படிக்கலாம்.**

ஒரு தொழிற் சங்கம் தீவிரமாக செயல்படுவதற்கும், வளர்ச்சிக்கும் முக்கியமாக அமைய வேண்டியது கிளைச் சங்கங்கள். இக் கிளைச் சங்கங்கள் எவ்வளவு தீவிரமாக செயல்படுகின்றனவோ, சங்க வளர்ச்சியில் ஈடுபடுகின்றனவோ, அந்த அளவிற்கு சங்கம் வளர்ச்சியடையும். கிளைச் சங்கங்கள் பெயரளவிற்கு இருந்து கொண்டு சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருந்தால் சங்கம் செயலிழந்து விடும். ஆகவே ஒரு தொழிற் சங்கத்துக்கு அடிப்படையாகத் திகழ்பவை கிளைச் சங்கங்களேயாகும். இந்தக் கிளைச் சங்கங்களே தோட்டக் கமிட்டி என அழைக்கப்படுகிறது.

இந்தக்குழுக்களை அமைப்பதற்கு முன்பாக சில விதிகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிற் சங்கங்களுக்குமுள்ள ஒப்பந்தம் அல்லது வழமையாகக் கடைப் பிடித்து வரும் பழக்கத்திற் கேற்ப குழு அமைக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் ஒரு தோட்டத்திலுள்ள மொத்த தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்கள் ஒரு தொழிற் சங்கத்தில் அங்கம் வகித்தால், அவர்கள் ஒரு குழுவை அமைத்துக் கொள்ள அருகதையுடையவர்களாகிறார்கள்.

ஒரு தோட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களிருந்து அவைகளுக்கும் மூன்றில் ஒரு பங்குஅங்கத்தவர்களிருந்தால், குழு அமைக்கக்கூடிய தகுதியை இழக்கின்றார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு சங்கத்திற்கு மட்டும் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தவர்களிருந்தால், அவர்கள் ஒரு குழுவை அமைக்கத் தகுதி பெறுகிறார்கள். இந்த முறையில்தான் தோட்டத் தொழிற் துறை சங்கங்கள் குழுக்களை அமைக்கின்றன.

தோட்டக் குழுவில் ஒரு தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுகிறார்கள். பொதுவாக அங்கத்தவர்களே இந்தக் குழுவை வருடாந்தரக் கூட்டத்தில் தெரிவு செய்கிறார்கள். இந்தக் குழுவைத் தெரிவு செய்யும் போது, ஓரளவு தொழிற் சங்க அறிவுடையவர்களைத் தேர்ந்தெடுப்பது நன்று.

சில தோட்ட நிர்வாகிகளின் போக்கும் தோட்டக் குழு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டோரை பிடிவாதக்காரர்களாகவும், முரட்டுத்தனமானவர்களாகவும் மாற்றி விடுகிறது. சில நிர்வாகங்கள் இவர்களை சங்கப் பிரதிநிதிகளாகவும் நினைப்பது கிடையாது. எந்த ஒரு தோட்ட நிர்வாகமும் தோட்டக் குழுவின் முறைப்பாடுகளை நேர்மையான முறையில் விசாரிப்பதில்லை. கேட்பதுமில்லை. இதனால் இரு சாராருக்குமிடையே நல்லுறவு ஏற்படமுடியாத சூழ்நிலை பிறந்து விடுகிறது. சில தோட்ட நிர்வாகங்கள் தலைவராகத் தெரிவு செய்யப் படுகிறவரை விலை கொடுத்து வாங்கிவிடுகின்றன. கங்காணி பதவி, வேறு இலேசான வேலை, நினைத்த நேரம் வேலைத்தளத்தை விட்டு வெளியேற அனுமதி போன்ற சலுகைகளால் சில தலைவர்கள் நிர்வாகங்களின் பொம்மைகளாக மாறி விடுகிறார்கள். கல்வி அறிவு இல்லாமையும், சட்டத்திட்டங்களை தெரிந்து கொள்ள முயற்சிக்காததுந்தான் இந்த விளைவுகளுக்குக் காரணமாகும்.

ஒரு தோட்டக் குழுவை தெரிவு செய்வதற்கு முன்பதாகவோ, அல்லது தெரிவுசெய்த பின்போ அவர்களுக்கு முறையான பயிற்சியளிப்பது தொழிற் சங்கங்களின் கடமை. தொழிற் சங்கங்கள் பயிற்சி வகுப்புகளாகவோ, நடைமுறையிலுள்ள ஒருசில சட்டங்களையோ அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்திடவேண்டியது அவசியம்.

ஒரு தோட்டக் குழுவைப் பொறுத்தவரையில் எல்லாப் பொறுப்புகளும் தலைவரையே சார்ந்தது. ஆகவே தலைவராக தெரிவு செய்யப்படுகிறவர் ஓரளவிற்கு கல்வி அறிவு உள்ளவராகவும், பொறுமைசாலியாகவும். மற்றவர்களை கவரக்கூடிய மனோபாவமுடையவராகவும் இருக்க வேண்டும். அவர் பல தரப்பட்ட பிரச்சினைகளை, தகராறுகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும். இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் மிகவும் பொறுமையாக, இருந்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் தலைவருக்கும் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கும் வேலை மாத்திரமல்ல, இவர் குழுவின் பிரதிநிதியாகவும், அங்கத்தவர்களுக்கும் சங்கத்திற்கும் தொடர்பை வளர்க்கும் பாலமாகவும் அமைகிறார். அதோடு கிளைச்சங்கத்தை வழிநடத்தும் தலைவனாகவும் அமைகிறார்.

தோட்டக்குழு முக்கியமாகவும் கட்டாயமாகவும் தோட்டத்தொழில், குடியிருப்பு வாழ்க்கை வசதிகள் முதலிய புள்ளி விபரங்களைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும். தொழிலாளிக்கும் தோட்ட நிர்வாகத்திற்கு மிடையே பிரச்சினை தகராறு ஏற்படும்போது இந்த புள்ளி விபரங்களை ஆதாரமாக வைத்து வாதிட வேண்டும்.



ஒரு பிரச்சினை ஏற்படும் போதுஅதை குழுவில் ஆராய வேண்டும். இதன்மூலம் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் பிரச்சினை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வழி பிறக்கிறது. வாரம் ஒரு குழு கூட்டமும் மாதமொரு முறை பொதுக் கூட்டமும் போட வேண்டும் இப்படிப்பட்ட கூட்டங்களில் தோட்டப்பிரச்சினைகள் மாத்திரமல்லாமல், தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட பொதுப்பிரச்சினைகள், ஆகியவைகளை ஆராயவேண்டும். அதோடு சங்க அறிக்கைகள், துண்டு பிரசுரங்கள் ஆகியவைகளையும் கூட்டங்களில் வாசித்து காண்பிப்பதுடன் விளக்கமும் கூற வேண்டும். தோட்டக்குழு, சங்கத்தின் பிரச்சாரக் குழுவாகவும் மாற வேண்டும்,

வருடாந்தர தேர்தல் கூட்டத்தில் கடந்த வருட அறிக்கையைத் தவறாது சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையில் தோட்டக்குழுவின் அந்த வருட சாதனைகளை குறிப்பிட்டிருக்க வேண்டும். இந்த அடிப்படையில் இயங்கும் ஒரு குழுவே நல்ல ஒரு தோட்டக்குழுவாக அமைய முடியும்.

---

—இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் தனது கண்பார்வைக்குள்ளான ஒரு வட்டத்துள்தான் தனது உலகைக் காணுகிறான். தனது பார்வை ஒரு குறிப்பிட்ட தூரத்தை மட்டுமே தொடமுடிகிறது என்பதை அவன் நினைப்பதில்லை. இதைமறந்து விடுகிறவர்கள் அநேகர். அதனால்தான் உலகில் அடக்கியாளும் எண்ணம் அதிகரித்துவிட்டது.

— அன்னையின் அன்பு ஒன்றே வஞ்சமில்லாதது. தூய்மையானது. என்றும் அப்படியே நிலைப்பது. ஏனைய அன்பு எல்லாம் அன்பல்ல. அவையாவும் வெளிப்பகட்டுக்காகவும் கடமைக்காகவும் உறவுக்காகவும், பொருளுக்காகவும், ஆசைக்காகவும் காட்டப்படும் ஊடல்கள்

— ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் அவசரப் புத்தியுடையவனாகவே உள்ளான். எதுவும் செய்யாமல் சோம்பித்திரிகிறவன் ஏதாவது செய்யத் தொடங்கிவிட்டாலோ, அந்தச் செயலை அவசரப்பட்டுச் செய்து முடிப்பதையே விரும்புகிறான். அந்த அவசரத்தால் அந்தச் செயலும் நிறைவானதாக முடிவுறுவதில்லை.

— மனித அறிவு பொதுவாகவே பிறரின் சிந்தனைகளுக்குக் கட்டுப்பட்டது. அந்த அறிவு சுதந்திர அறிவாகாது. ஒவ்வொரு மனிதனும் தனது சுய அறிவை விருத்தி செய்யாமல் சுதந்திரமற்ற பிறர் அறிவுள் தன் அறிவை வளர்ப்பதால் சுதந்திரம் என்பதே அவனுக்கு மர்மமாக இருக்கிறது. பூரண சுதந்திரத்தை எய்திட விரும்புகிறவன் மனச் சுதந்திரம் எய்திடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவலியே வாழ்க

## பெ. சொ. முருகையா

(உதவி—நிதிக்காரியதரிசி தொ. தே. சங்கம்)

மாவலிக் கங்கை, இயற்கை வளம் கொழித்திடும் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு, இலங்கையின் நீண்ட மாபெருங்கங்கையாகச் செல்லுமிட மெல்லாம் பசுமைபடரச் செய்து, பலன்கள் பல படைப்பதைக் காணுகிறோம்.

அந்தப் புனித கங்கையின் நாமத்தை மகுடமாகக் கொண்டு தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொள்கைகளைத் தாங்கிப் பவனி வரும் மாவலி மாத இதழினை வரவேற்பதில் மலையகத் தொழிலாளர்கள் காட்டிடும் ஆர்வம் கண்டு களிப்படைகிறேன்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிற்பியும், வீரத் தளபதியுமாக விளங்கி அமரத்துவ நிலை எய்திய அமரர் திரு. வெள்ளையன் அவர்கள் தொழிலாளர் தேசிய சங்கத்திற் கென ஒரு தனி ஏடு வேண்டும் அதன் மூலம் மலையக தொழிலாளரிடையே அறவொளியையும் நன் னம்பிக்கையையும் ஊட்டலாம் எனக் கூறிவந்துள்ளார். அவரது கனவு மாவலி மாத இத ழின் பவனியால் பலித்துவிட்டது.

மாவலி ஜீவநதி. அதன் பெருமைக்குச் சான்று இலங்கையின் இயற்கை எழில். அது போல மாலவி இதழும், அறிவமுதக் கங்கையாகப் பவனி வருகிறது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் குறிக்கோள்களையும், ஏனைய எழுத்தாளர்களின் கருத்தோவியங்களையும் தாங்கி வெற்றி விஜயம் செய்கிறது.

மாவலியின் பவனி மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் தடைக் கற்களாக இருக்கும் பல வேண்டாத வழக்கங்களை நீக்கிடவும், மலையக மக்கள் தலைநிமிர்ந்து ஏனைய மக்களுடன் சரி நிகர் சமானமாக வாழ்ந்திடவும் அயராது உழைத்திடும் என நம்புகிறேன்.

எமது தாயகமாம் இலங்கையின் மண்வளத்தை ஓயாத உழைப்பால் பொன்னாக்கிப் பொருள்வளம் படைத்திடும் மலையக மக்களின் வாழ்வில் புதிய விழிப்பும் பொலிவும் மாவலி யின் பவனியால் ஏற்பட வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

# வெற்றி நமதே

## செ. முனியாண்டி

(கொட்டியாக் கொல்லை பொகவந்தலாவ.)

மலையகத்துத் தொழிலாளியின் வாழ்க்கையில் தொழிலாளர் தேசிய சங்கம் புதிய விழிப்பைத் தந்து வருகிறது. 1965ம் ஆண்டு மே மாதம், மாதச்சம்பளமே மலையகமக்களுக்குத் தேவை என்ற குரலெழுப்பித் தலை தூக்கியது தொழிலாளர் தேசிய சங்கம்.

விலைவாசிகளின் உயர்வையும், வேலை நாட்குறைப்பையும், பற்ருக்குறை உணவு விநி யோகத்தையும், தோட்டச் சுவீகரிப்பால் எழுந்த வேலையில்லாப் பிரச்சினையையும், இலங் கைக் குடியிருப்புக்கு மறுப்புக் கூறுவதையும், தனது பலத்தால் எதிர்த்து வெற்றிகாணுவதற்கு தொழிலாளர் தேசிய சங்கம், தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் வெற்றி மலையகத் தொழிலாளரின் மகத்தான வெற்றி.

அமரர் திரு வி. கே. வெள்ளையன் அவர்களின் இலட்சியக் கனவு தொ. தே. சங்கத்தால்செய லாகிக் கொண்டிருக்கிறது. ஏனைய தொழிற்சங்கங்களால் சாதிக்கப்படாத பல அரிய பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து சாதனைகளில் சங்கம் வெற்றி ஈட்டியிருக்கிறது மலையகமக்களாகிய எமது எதிர் காலப் பொறுப்பினை தொழிலாளர் சங்க நிர்வாகிகளின் கரங்களிலே ஒப்படைத்துள்ளோம். அவர் கள் இதுவரையில் இடைவிடாத முயற்சிகளால் தொழிலாளர் தேசிய சங்கத்தைக் கட்டிக் காத்து வருகிருர்கள்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் உன்னத வளர்ச்சி அதன் தன்னலமற்ற பணியே. மலை கத்தின் தொழிலாளர்கள் அனைவரும் இன்னும் பழைய கொள்கைகளிலே கவனம் செலுத்தாமல் தொழிலாளர் தேசிய சங்கத்தின் புதிய கொள்கைகளிலே ஈடுபட முன்வரவேண்டும். தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொடியின்கீழ் ஒன்றுபட்டு உரிமைகளை அடைந்திடத் துணிந்திட வேண்டும். அத்தகைய நன்னாளில் வெற்றி நமதே என்ற குரல் மலையகம் எங்கும் எதிரொலித்திடும். ஆம்— வெற்றி நமதே!

---

— தேயிலை, றப்பர், தேங்காய் ஏற்றுமதி மூலம் நமக்கு அதிகப்படியான வெளிநாட்டுச் செலா வணி கிடைக்கிறது முக்கியமாகத் தேயிலை ஏற்றுமதியால் அதிகமான செலாவாணியைப் பெறுகி ரோம். இலங்கைத் தேயிலைக்கு உலக நாடுகளில் நன்மதிப்பு இருக்கிறது. தேயிலைதான் இலங் கைக்குப் பிரதானமான வருமானத்தைத் தருவதாகும். — அமைச்சர் மைக்கல் சிறிவர்தன

# தொ. தே. சங்கத்தில் ஏன் சேர்ந்தேன்!



பெ. ராமையா

**தொழிலாளர் தேசிய சங்கத்தில் சேர்ந்தோர் எத்தனையோ நன்மைகளை அடைந்துள்ளனர். அந்தச் சங்கத்தின் இலட்சியங்களால் கவரப்பட்ட திரு. பெ. ராமையா சொல்வதைக் கேட்போம்.**

1964ம் ஆண்டு மே மாதம் முதல் திகதி எனது நினைவிலும் எனது சகாக்களின் நினைவிலும் பசுமையாகக் காட்சி தரும் நாள். அந்த நாளுக்கு ஏன் அவ்வளவு முக்கியம் கொடுக்கிறேன் என்றால் அன்றைய தினம் உலகத் தொழிலாளர் வெற்றித் தினம் என்ற காரணத்தால் மட்டுமல்ல. அன்றுதான் தொழிலாளர்களின் பேரியக்கமான தொழிலாளர் தேசிய சங்கத்தில் நானும் 218 தொழிலாளத் தோழர்களும் அங்கத்தவர்களாகினோம்.

இனபேதமும், வர்க்க பேதமும் அகன்றிட சம்பள உயர்வும் சுபீட்ச வாழ்வும் ஒளி விட்டுப் பிரகாசித்திட, மலையகத் தொழிலாளர் வாழ்வில் புதியதோர் நம்பிக்கையை ஏற்படுத்தி வெற்றி வளர்ச்சியடைந்து கொண்டிருந்த தொழிலாளர் தேசிய சங்கத்தில் சேருவதற்குத் தூண்டிய விருப்பமே அந்தச் சங்கத்தின் உன்னத இலட்சியக் கொள்கைகளாகும்.

தொழிலாளர்களைக் கண்கலங்க விடாமலும், முதலாளிகளாலும், தோட்ட சுவீகரிப்பாலும் துன்புற்று வாடாமல், பாதுகாப்புக்கு அவசியமான நடவடிக்கைகளை காலந் தாழ்த்தாது தொழிலாளர் தேசிய சங்கம் எடுத்து வந்தது என்னை மிகவும் கவர்ந்தது.

ஒட்டரி தோட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 19 தொழிலாளர்களுக்கும் மஸ்கெலிய நீர்த்தேக்கத் திட்டத்தால் வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கும் மஸ்கேலிய தோட்டத்தையே குத்தகைக்கு எடுத்துத் தொழிலாளர்கள் அல்லற்படாது வாழ்வதற்குத் தக்க பணிபுரிந்த அமரர் திரு. வெள்ளையனின் முயற்சிகளுக்கு ஈடாக ஏதுமில்லை. இது தவிர வேலை நீக்கஞ் செய்யப்பட்டுத் துன்புற்று நலிந்த தொழிலாளர்களுக்காக தொழில் நீதி மன்றத்தில் வாதாடி நீதி வழங்கிடவும் தொழிலாளர் தேசிய சங்கம் பின் நிற்கவில்லை.

தொழிலாளர் தேசிய சங்கத்தாரால் எத்தனையோ நன்மைகள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவுக்கு இடம் பெயர்ந்து செல்லுகிறவர்களுக்கு 1970 முதல் 1972 டிசம்பர் கடைசி வரையில் 30,200 ரூபாய் வாங்கிக் கொடுத்து வெற்றி முரசு கொட்டியது.

இத்தகைய பெரு முயற்சிகளை காலந்தாழ்த்தாது செயல்படுத்தும் தொழிலாளர் தேசிய சங்கத்தை அமரர் திரு. வெள்ளையனுக்குப் பின் வழி நடத்திச் செல்லும் சங்கப் பொறுப்பாளர்களின் துணை, தொழிலாளர்களின் சிறப்பான வாழ்வுக்கு வழி வகுத்திடும் என்பது என் நம்பிக்கை.

தொழிலாளர் தேசிய சங்கம் ஆற்றியுள்ள பணிகள் பல. இன்று ஆற்றி வரும் சேவை எல்லா வகையாலும் பாராட்டச் சிறந்ததே. மாதச் சம்பளப் பிரச்சினையில் முழு மூச்சுடன் கவனத்தைச் செலுத்தித் தொழிலாளரின் மகிழ்ச்சி நிறையும் வாழ்க்கைக்கு வழியாக்கித் தரும் பெரும் பணியில் தொழிலாளர் தேசிய சங்கம் ஈடுபட்டிருப்பது, ஒவ்வொரு தொழிலாளிக்கும் பேரானந்தம் தரும் செயலாகும்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிறப்பியல்புகள் மேலும் மேலும் உயர்ந்து ஓங்கிடத் தொழிலாளர் தேசிய சங்கத்தாருடன் எல்லோரும் இணைந்திட வேண்டும். சங்கத்தின் குறிக்கோள்களையும் காத்திட வேண்டும்.

---

— ஒருவரைக் கண்ட மாத்திரத்தில் அந்த மனிதரின் முக பாவங்களாலும் அந்த மனிதரின் குறிப்பறிந்து அவரது கருத்துக்களை அறிந்து கொள்ளக்கூடியவர்கள் உலகிற்கு அணிகலன் போன்றவர்கள். இத்தகைய பண்பு பழங்காலத்து புலவர்களிடமிருந்தது. மன்னர்களிடமிருந்தது. அமைச்சர்களிடமிருந்தது. ஆனால் இன்று அத்தகைய பண்புகளையுடைய புலவர்கள் உள்ளனர். ஆனால் மன்னர்கள் இல்லை. அறிவும் ஆற்றலுமுடைய அமைச்சர்களுமில்லை.

-- ஏற்றமும், வீழ்ச்சியும் வழமையான நியதிகள். மேலே ஏறுகிறவன் கீழே இறங்கத்தான் வேண்டும். அதைப்போல பதவி உயர்வுகளால் அந்தஸ்தை உயர்த்திக்கொண்டவர்களும், தமக்கு நிகர் யாரும் இல்லையே என்ற கர்வத்தினால் மற்றவர்களைத் தாழ்த்துவதிலே கண்ணும் கருத்துமாக இருந்திடலாம். ஆனால் கால வேகத்தில் எதிர்பாராத பெரும் வீழ்ச்சி இப்படியானவர்களை அடியோடு அழித்துவிடலாம். எனவே எத்தனை உயர்வு ஏற்பட்டாலும் வீண் அகந்தை கொள்ளக்கூடாது.

— எந்த நாட்டை நல்ல நாடு என்று கூறுவது! இன்றைய உலக நடப்பில் ஓரளவாவது, பசி, நோய், பகை இவைகளைத் தடுத்திடவல்ல நாடுகளிருந்தால் அவைகளை நல்ல நாடு எனலாம். ஆனால் மிக்க பசி ஓயாத நோய், வெளிநாட்டுப் பகை முதலியன வற்றை வலிய தேடிக்கொள்ளும் நாட்டை நல்ல நாடென்று கூற முடியுமா?

— துணிவுடைய மனிதனே நம்பிக்கையுடையவன்.

—கிலோரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தொழில்துறை

லக்ஷ்மன் த. மெல்
(தொழில் ஆணையாளர்)

19 ம் நூற்றாண்டில் கோப்பித் தோட்டங்களைத் திறந்தபோது தொழிலாளர் சமூகம் என்று ஒன்றைப்பற்றியே இலங்கை தெரிந்திருந்திடவில்லை. 1823 முதல் 1837ம் ஆண்டுகளுக்குள் கோப்பி உற்பத்தி மிக விசாலமான அளவில் செய்யப்பட்டது. படிப்படியே விவசாய வளர்ச்சி அதிக லாபத்தை தருவதாகியது. 1850 ம் ஆண்டு பிற்பகுதி வரை, ஆண்டுக்கு 10.000 ஏக்கர் நிலத்தில் கோப்பி பயிரிடப்பட்டது. 1841-ம் ஆண்டில் 78 685 ஏக்கர் நிலம் கோப்பித் தோட்டங்களாயின.

சிங்கள கிராமத்தினர் கோப்பித் தோட்டத்தின் தொழில் பருவகாலத்தில் மட்டும் கிடைத்ததினால் அதிக கவனம் செலுத்தவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு தச்சுத் தொழில், தொழிற்சாலை கட்டுதல் ஆகிய வேலைகள் முடிவுற்றதும் அவர்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்றனர்.

இந்த இடைவெளியை நிரப்பவும் நிரந்திரத் தொழிலுக்கு ஆட்களை வைக்கவும், தமிழ் தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து கொண்டுவந்தனர். அக்காலத்தில் வேலைக்கு ஆட்களை எடுப்பதற்கு குறிப்பிட்ட ஒரு கணக்கில்லாதிருந்தபடியால் ஏராளமான இந்தியத் தமிழர்கள் தோட்ட வேலைகளில் சேர்ந்தனர்.

முதலாவதாக இந்தியத் தமிழ் தொழிலாளர்களை அழைத்தவர் கெப்டன் எம். சி. பர்ட் என்பவரே. இவர் 1884 ம் ஆண்டு தன்னிடம் வேலை பார்த்த தொழிலதிகாரியை(கண்டக்டர்) திருகோணமலைக்கு அனுப்பி வைத்து அவர் மூலம் ஒரு தமிழ் பிரதிநிதியை இந்தியாவுக்கு அனுப்பித் தொழிலாளர்களைச் சேர்த்தார். அந்தப் பிரதிநிதி முதன் முதலாக 14 தொழிலாளர்களைக் கூட்டிக்கொண்டு வந்தார்.

19 ம் நூற்றாண்டின் இறுதியில் கோப்பி யுகம் மறைந்தது. தேயிலை உற்பத்தித் தொடங்கியது. 1839 முதல் தேயிலை உற்பத்தி அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் பேராதெனிய பூந்தோட்டத்தில் பரீட்சைக்காக தேயிலைச் செடிகள் நாட்டப்பட்டன.

தொடர்ந்து இந்தியத் தொழிலாளர்கள் வேலைக்கமரலாயினர். கங்காணிகள் ஆள் சேர்ப்பவராக முன்னின்றனர். இவர்கள் ஆள் சேர்ப்பது திருப்திகரமானதாக இருக்கவில்லை. பிரயாணத்தின்போது நோய்வாய்ப்பட்டோரும், வைத்திய வசதியில்லாமலும், பிரயாண வசதி வாய்ப்புக்கள் இல்லாமலும் மன்னாரிலிருந்து தேயிலைத் தோட்டங்களுக்கு வருவதற்குச் சிரமங்கள் பல இடையூறுகளாக இருந்தன 1854 ல் தோட்ட முதலாளிகளின் சம்மேளனம் இந்த இடையூறுகளை அகற்றவே அமைக்கப்பட்டது.

1856 வரை கங்காணிகளால் ஆள் சேர்க்கப்பட்டு வந்தது. பின்னர் தோட்ட முதலாளிகளின் சம்மேளனமே கரையோர ஏஜண்டுகளை நியமித்துத் தனது அதிகாரத்துக்குள் கட்டுப்படுத்தியது. இந்த ஸ்தாபனத்தின் மூலமே தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைக்கமர்த்தப்பட்டு வந்தனர்.

இந்தியக் கரையோரத்தில் மருந்து வசதிகளுக்காக உதவி வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டார். கடல் கடந்து வரும் தொழிலாளர்களை அந்த வைத்திய அதிகாரி கவனித்து நோயில்லாதவர்களை மட்டும் இங்கு அனுப்பி வைக்கும் பணியைச் செய்தார். தோட்ட முதலாளி சம்மேளனம் சிறிய அளவில் இந்தச் சாதனையைப் புரியினும் அவ்வளவு பெரிய இபக்கத்தின் அச்சாணியாக இயங்கும் பலம் வாய்ந்ததாக இருக்கவில்லை. ஆகவே 1904 ம் ஆண்டில்தான் முறைப்படி 'கரையோர ஏஜண்டு' ஸ்தாபனம் நிறுவப்பட்டது.

1864ல் தொழிலாளர் தேவைகள் அதிகமாகிவிட்டபடியால் திரு. பெட்றிக் ரயன் என்ற தோட்டத்துரை, 'குடியேற்றக் கூலிகள் சங்கம்' ஒன்றை அமைக்கத் தூண்டினார். அப்போது, தோட்டத் தொழிலுக்கு மட்டுமல்ல, இதர அரசாங்க தொழில் துறைகளுக்கும் தொழிலாளர்கள் தேவைப்படுவாராயினர்.

தோட்ட முதலாளிகளின் சம்மேளனத்தின் சிறப்புக்குரிய முக்கியத்துவம் அப்போதைய வெள்ளைக்கார ஆட்சிக்கு தொழிலாளர்களின் சுகாதாரம் பற்றிய வேண்டுகோளாகும்.

அந்த வேண்டுகோளில் 'மனிதாபிமானத்துடன் வைத்தியசாலைகளை அமைத்து தமிழ்க் கூலிகளின் சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் அரசாங்கத்தினால்தான் முடியும். பிரித்தானிய அரசு தமிழர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறது என்பதை மனதில்கொண்டு இந்த நல்ல காரியத்தை அரசு செய்திட வேண்டும்' என்று கோரியது.

அதன் பின் ஒருசில தலைமுறைகள் கடந்ததும் 'தொழிலாளர் சமுகம் உருவாகியது. தோட்டங்களின் அருகிலிருந்த கிராம மக்களும் தொழிலாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். தொழிலாளர் இனமே உருவாகியது. தோட்ட நிர்வாகமும் தொழிலாளர் வாழ்க்கை வசதிகளைக் கவனிக்கத் தொடங்கியது. பாரம்பரியமான ஒரு உறவு வளர்ந்தது. ஒவ்வொரு தோட்டத் துரையும், அதிகாரியாகவும், ஆதரவாளராகவும், தொழில் நிர்வாகியாகவும் வியாபார ஆலோசகராகவும், சமாதானச் சிற்பியாகவும், டச்சு மாமாவாகவும், 2000த்திற்கு அதிகமான தொழிலாளர்களுடன் ஒவ்வொரு தோட்டத்திலும் வாழ்க்கை நடாத்தினர். இந்த நல்ல முறைகள் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாக்கப்பட்டனவோ அவ்வளவுக்கவ்வளவு நல்லுறவு வளர்ந்துவேரூன்றியது. — (தொடரும்)

ஆதாரம்:
(தொழில் துறை நல்லுறவு வளர்ச்சி நூலிலிருந்து)

---

நாம் விரும்பி விலைமதிக்கும் துணிவு மதிப்புடன் இறப்பதற்காக வல்ல, ஆனால் மனிதத் தகையுடன் வாழ்வதற்காக.

—கார்லைல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தர்மமே புரியும் சத்திய மனிதர்!

ஆங்கிலமூலம்:— கவிஞர் ஸி வி. வேலுப்பிள்ளை
தமிழ்வடிவம்:— கவிஞர் சக்தீபாலையா

செம்பு நிறத்து வைரத் தேகச்
சிறப்பும் பூண்ட என் தமிழ் ஆடவர்
நம்பும் இயற்கை வளத்துயிர் ஊட்டி
நாட்டின் உயிர்களைக் காத்து மதிப்பவர்

எழுவான் ஒளியும் புலர்ந்தது முதற் கை
ஏந்தும் குத்துளி, கோடரி சுத்தியால்
வழுவா தாள இசையதைப் போல
வழங்கு சப்த எதிரொலி தொடர்ந்து

காட்டிலும் மேட்டிலும் மலையிலும் மடுவிலும்
கானம் புரிவதும் கற்பிதமாமோ!
நாட்டுளோர் இதனை நம்புவராமோ!
நம்மவர் உரிமையை நல்கவும் போமோ!

முள்ளாற் மண்ணைக் கிளர்பவர் பலபேர்
முறையாய்க் கவ்வாத்துக் கொய்பவர் பலபேர்
தெள்ளிய எருவைத் தூவுவோர் பலபேர்
தொற்று நோய் மருந்தைத் தெளிப்பவர் பலபேர்

— இவரெல்லாம்

தத்தம் தொழிலில் தமக்கோர் நிகரிலா
உத்தமர் எனது உறவுகாண் மனிதர்
தத்தம் செயலில் முறை பிசகாது
தர்மமே புரியும் சத்தியமனிதர்.



கண்களுக்கெட்டும் ககன விளிம்பையும்
கடந்தகற்கப்பால் வெகு தூரத் தாங்கும்
எண்ணற்கெளிதலாத் தொலைவையுங் கடந்து
ஏக்கத் தீயிடை எழு மூச்சுப்போல்

நொந்து குமுறி அழுத கண்ணீருடன்
நித்தமும் தம்முடல் நிலம் புதைத்துழன்ற
எந்தையோர் தம்மின் எலும்புக் குவியல்கள்
எத்தனை எத்தனை எத்தனையாமோ?

ஆழப் புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து
எவரெவர் வாழவோ தன்னுயிர் தருவன்.

வாடியரோசா மலரிதழ்போல
வாடியே அன்னார் வாழ்க்கை கழிந்தது
கூடிய வழக்கக் கொடுமைகள் யாவும்
கூர் முள்ளெனவே குடி, குடி தொடர்ந்தன.

நாகையும் சவுக்கும் நட்டவரில்லை காண்
நன்னிலம் படைத்த பொன்னுடல் இல்லைகாண்
ஈகையே புரிந்த என் முந்தையோர் இல்லைகாண்
இங்கவர் செய்தவை எண்ணுவாரில்லைகாண்.

புழுதிப் படுக்கையில் புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற் புகல் மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவு நாள் பகருவாரில்லை.

நூற்றுண்டுகாலமாய் நுழைந்த இவ்விருட்டை
வேரோடழித்திட என் தமிழ் மக்கள்
கூறுவர் சிகர உச்சியில் ஏறிக்
கூறுவர் திடல்கள் யாங்கனு மடுக்கவே;

விடுதலைக் குரலது வெற்றிக்குரலது
வீரக்குரலதும் விரைந்தெழக் கேட்பீர்;
அடிமை நிலையை அகற்றவுமழைக்கும்
அன்புக் குரலது அன்பரீர் கேட்பீர்

வாக்குரிமையொடு வளநாட்டுரிமையும்
ஊக்கமும் வெற்றி ஓம்பிடுங்காலம்
பூக்குமே அந்தப் புண்ணிய நாள்தனில்
ஆக்கம் புரிந்தவர் அமைதியிழந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சினில் சுதந்திரத் திரு கலந்திடுமே
மூச்சினில் விடுதலைச் சுகம் மலர்ந்திடுமே
பேச்சினில் வீரமும், உறுதியும் மாட்சியும்
பிறந்திடும் வெற்றிப் பெருவாழ்வாமே,

("தேயிலைத் தோட்டத்திலே" கவிதை நூலிலிருந்து)

## விளக்கொளியாய் நீயிரு



மலையகத்தின் மாணிக்கமே
தமிழினத்தின் தலைமகனே
தொழிலாளர் உரிமைகளை
நிலைசெய்த வல்லோனே

உன் புகழைப் பாடுகிறேன்
உன் அடியைப் பணிகின்றேன்
நீ குறித்த குறிக்கோளை
இலட்சியமாய்க் கொள்கின்றேன்

என் பயணம் வெற்றிபெற
இனியவனே வாழ்த்துரைப்பாய்
என் வீட்டு விளக்கொளியாய்
நீ இருந்து வழிகாட்டு.

(அரு. செல்வராஜ் பழைய தோட்டம் மஸ்கெலிய)

இறைவா!
தாங்களே எனது கர்த்தா. இந்த மெல்லிய கண்ணாடிச் சாடியைத் தங்களின் மதுர நாதங்களால் மீண்டும் மீண்டும் நிரப்பி அழியாத புது வாழ்வை மலரச் செய்கின்றீர்கள். தங்களின் எண்ணம் போல் என் வாழ்வும் நீடிக்கிறது"

-மகாகவி தாகூர்—



# பரிபூரணானந்தத்தில் திளைக்கும் பரம புருடர்

"சக்தீ"



நித்தியமும் நிறைவான இன்பத்தில், சர்வமுமாக – ஏகநிறைவாக—தனித்துவமாகத் -தானேயாகி, அமர நிலையில் திளைக்கும் அதிசய புருடர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.

சாதி, மத, சாத்திர, கோத்திர, வேத, வெறுப்பு, விருப்புகளுக்கும் அப்பால், உலகத்தார் அறிவுக்கும், அறிதற்கும் அரிய அழியாத அமர நிலையில் அனுப்போதும் அகலாது அநுபவிக்க அநுபவிக்கப் புதுமைப் பொலிவுகளைப் பொங்கிப் பொழியும் பேரின்பத் திருவில்—பொதுவில் கலந்திருக்கும் புண்ணிய புருடர்தான் தத்துவ ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி. கிரேக்கம் தந்த சித்தாந்தி சோக்ரட்டீஸ் முதல் தமிழ்நாடு பெற்ற பல்வேறு சித்தர்களில் மரணமிலாப் பெருவாழ்விலுறும் இராமலிங்க வள்ளற் பெருமான் அருளியதைப்போல மெய்ஞானத் திருப் பேரொளியாம் அருட் பொதுவில் கலந்திடத் தங்கு தடையாக நிற்கும் பல் சமய பேதங்கள், மதங்கள், சாத்திரங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் அனைத்தையும் கடந்தவர் உலக மகா ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.

"மனவிழிப்பு எப்போதும் ஒரே தன்மையில் நிலவிடவேண்டும். மனத்தில் அமைதி வேண்டும். நாம் நம்மை உணர்ந்தவாரிருக்கும் நிலையில்தான் ஆனந்தத்தை அநுபவிக்கிறோம். அநுபவிப்பவனே அநுபவமாகவும், சிந்தனையாளனே சிந்தையாகவும் அங்கு நிலவிடமுடியும்.

"சொந்த விடயத்தில், அல்லது அரசியலில், அல்லது மதத்தில் அல்லது வேறு விடயங்களில் அபிப்பிராயத்தையும், ஆதாரங்களையும் முடிவு கட்டி வைத்துள்ள மனம், அறியாததை அநுபவித்திட முடியாது. நாம் இன்னும் அறியாதது எதுவோ அதுவே புதுமை. அறிந்தவை எல்லாம் புதுமையுமல்ல; அவை உண்மையானவையுமல்ல" என்று நமக்குள் விழிப்பூட்டும் நற்றிரு ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் தமது 78ம் வயதிலும் உலக வலம் வந்து நிமிடத்துக்கு நிமிடம், விநாடிக்கு விநாடி, புதுமையாம் பேரின்பத் தேனை நாளும் அனுபவித்திட நம் மனத்துள் எழுச்சி செய்திடும் மகா ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, உலகத்தாரை உய்விக்க வந்த உலக மகா குரு என மேலை நாட்டவர்களும், அமெரிக்க தேசத்தாரும் ஆசிய, கிழக்காசிய தேசத்தவர்களும் போற்றுவதில் அந்த மகானின் புனிதம் பொலிவுறுகிறது. போலி மத வாதங்களையும், மதவாதிகளையும், பொய்மையைப்போற்றும் வியாபாரிகளெனவும் புலப்படுத்துகிறது.

எத்தனை எத்தனை ஆண்டுகளாக, எத்தனை எத்தனை பாரம்பரியங்களாக, எத்தனையோ மதங்களையும், மர்ர்க்கங்களையும், கொள்கைகளையும், குருமார்களையும், வெவ்வேறு நாமபேத ரூபங்களையும் இறைவன் ஒருவன் என்ற எண்ணத்தையும் அவனை வணங்கித் தொழ முறைகள், வழிபடு தோத்திரங்கள், எனப் பலவாறு பலதையும் பலர், காலத்துக்குக் காலம் உலக மக்களிடையே தோற்றுவித்தனராயினும் அவர்கள் உலக மக்களின் அறியாமையைத்துடைத்து அவரவர் நம்பிக்கையைப் புகுத்தாமல், குருடன் ஒருவன் மற்ற குருடனுக்கு வெளிச்சத்தைப் பற்றிய விளக்கம் அளித்த கதையாகவே தத்தம் கொள்கைகளைப் பரப்பினர். இது காரணமாக இன்றுவரை இறை அல்லது கடவுள், அல்லது தெய்வம், அல்லது ஆண்டவன் என்பது என்ன, எது, எதனை, ஏன் என்று ஊடுருவித் தெரிந்துக்கொள்ளும் வாய்ப்பை மதவாதிகளும், மார்க்க வாதிகளும் இதுவரை சொல்லத் துணிந்திடவில்லை. காரணம் தங்களின் அறிவு சொந்த அறிவாக இல்லாது போனதுதான். தொன்று தொட்டு வாய்ப் பேச்சில் வளர்ந்து, கற்பனைகள் பல பொதிந்து, காலத்துக்குக்காலம் இன்னும் பலப்பல நம்பிக்கைகளின் தொடர்புகளைக் கூட்டி ஊட்டப்பட்ட அறிவினையுடையவர்களின் அறிவுக்குள் கட்டுப்பட்டு வளர்ந்திருக்கும் நாம், சுதந்திரமான நமது சுயஅறிவை இன்னும் புரிந்து கொள்ளாத நிலையில் நமது மனத்தில் பாலப்பருவந் தொட்டு விதைக்கப்பட்ட தெளிவில்லாத நம்பிக்கைகளை உண்மை எனச் சொல்லுவதிலும், அந்த நம்பிக்கைகளைக் கடைப்பிடிப்பதில் நமக்கென ஒரு மதத்தையும், அதற்குச் சின்னங்களையும், வேதங்களையும், மந்திரங்களையும், ஜப தபங்களையும் ஒரு ஆண்டவனையும் கற்பித்து விழிகண் குருடர்களைப் போல உண்மை ஒளியை உணராது உண்மையான நிறைவின்பத்தை, பேரின்பத்தை அறிந்து உணர்ந்து அநுபவித்திடாமல் வெறும் சொற்களைக் கூறி நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்கிறோம். மற்றவர்களையும் ஏமாற்றத்துள் ஆழ்த்தக்கருவியாகி விடுகிறோம்.

இதுவரையிலுள்ள மதங்கள் மார்க்கங்கள், வேதங்கள், இறைவனை, அல்லது ஆண்டவனைக் காட்டியுள்ளனவா? பயத்தாலும் தன்னையுணராத் தன்மையினாலும், இது பொழுதுவரை நமது மனத்துள் பொதிந்து கிடக்கும் சகல அறிவுகளையும், கற்பிதங்களையும் இழந்துவிடக்கூடாதெனும் பிடிவாதத்துடன்



வாழும் நாம், புதியதாக இன்னும் நாமறிந்திராத உண்மை நிலையை அமரநிலையை அறிந்திடல் எளிதன்று.

ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் தத்துவங்கள் பழையனவல்ல; எவர் எவரோ, யார் யாரோ கூறியவற்றை மதவாதிகளும், மதப்பிரசங்கிகளும் இசைத் தட்டைப் போலவும், ஒலிப் பதிவு நாடாக்களைப் போலவும், கிளிப் பிள்ளைகளைப் போலவும் மீண்டும் மீண்டும் ஒலிபரப்புவதல்ல. தன்னைத்தான் உணர்ந்திடும் தனித்துவம் அது. அவ்வப்போதே அனுபவித்திடவல்ல நேர்மை நியதி அது.

எதற்கும் கட்டுப்படாத, எந்த அறிவுக்கும், அடங்காத வெறுமையான நிலையினையுடைய மனத்தில்தான் புதுமைபுகுந்திட முடியும். நாமறியாத உண்மையினை அங்கு அநுபவித்திடலாம். பிற அறிவுக்கும், மதங்களின் நம்பிக்கைகளுக்கும், கொள்கை கோட்பாடுகளின் கட்டுப்பாடுகளுக்கும் உள்ளடங்கிய அறிவு சுதந்திரமற்றது. அத்தகைய மனது ஒரு சிறைக்கூடமேயல்லாது வேறில்லை. அந்த மனத்தில் ஒளி அலங்காரங்கள் செய்வதால் மட்டும் சுதந்திரம் பிறந்து விடமுடியாது.

நமது மனத்தில் அடைபட்டுக் கிடக்கும் சகல அநுபவங்களையும் நம்பிக்கைகளையும், உதறித் தள்ளிவிடக்கூடிய துணிவுள்ளவராகுவோமானால் நாமறியாத அந்தப் பேரின்பத்தை எய்துவோம். அதற்காகக் குருவும், போதமும், கொள்கையும், கோட்பாடும், மதங்களும் மார்க்கங்களும் அவசியம் என்பதல்ல; உலக மக்களின் அறியாமைக்குச் சூடப்பட்டுள்ள ஆடம்பரமான அலங்காரமே இவைகள். இவற்றினால் அறிய அறியப் புதுமையாக விளங்கும் அந்த உண்மையை அநுபவித்தல் முடியாது. இவை யாவும் வெறும் கேலிச்சம்பிரதாயங்கள். மதவாதிகளின் வயிற்றுப் பிழைப்புக்கும், புகழுக்கும், அந்தஸ்த்துக்கும் ஆக்கப்பட்ட பழக்க வழக்கங்கள். கிருஷ்ணஜி சொல்லுகிறார்''

''தலையை மொட்டையடித்துக்கொள்வதாலும், காவியணிவதாலும், பத்மாசனங்களிலிருப்பதாலும்; மண்டியிடுவதாலும், வேத, நாமங்களை உச்சரிப்பதாலும் நாமடைந்த பயன் என்ன? நாம் மந்திரங்களை உருப்போடுவதைப் போல, 'மர்சிடஸ் பென்ஸ்' அல்லது கொக்காகோலா' என்று உருப்போட்டாலும் ஒன்றுதான். உண்மையை உணருவதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகள்தாம் இவை''

அடையாறு பிரம்மஞான சபையின் நூல் நிலைய அலுவலர் வான் மானேனின் கவனத்தைக் கவர்ந்தவனாக சிறுவன் ஜிட்டு இருந்தான். அந்தச் சிறுவனை பிரம்மஞான சபை ஸ்தாபகர் அன்னிபெஸண்ட் அம்மையாரிடம் அழைத்துச் சென்றார். அந்தச் சிறுவனின் உள்ளார்ந்த பெருமை அம்மையாருக்குப் புலப்பட்டது. உலகை உத்தாரணம் செய்வதற்கு ஒரு மகா சக்தி வெளிப்படப் போகிறது என்று அம்மையார் தீவிரமாகக் கருதி வந்த காலம் அது. அந்த மகாசக்தியின் வெளியீட்டுக்கு கிருஷ்ணமூர்த்தியே சரியான கருவி என்றுஉறுதிகொண்டார்.

பிரமஞான சபையின் எஸ்டேட் சுப்பிரண்டாக இருந்த நாராயணய்யாவின் புதல்வரே கிருஷ்ணமூர்த்தி. அவரிடமிருந்து கிருஷ்ணமூர்த்தியை வளர்த்துக் கற்பித்து ஆளாக்கும் பொறுப்பை ஏற்றார் அம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் அன்னி பெஸண்ட்.

பள்ளிப்பிள்ளையாக இருக்கும் போதே அவ்வப்போது தம்மை மறந்து சத்தியாநுபவச் சூழலில் ஆழ்ந்துவிடுவார் கிருஷ்ண மூர்த்தி.

நினைவு என்கிற சுமை. கருத்து என்கிற பாரம், மரபு என்கிற பளு, இவை ஏதுமே இல்லாமல் வெட்ட வெளி போல் உள்ளத்தை ஆக்கிக் கொண்டால், அப்போதைக்கப் போதே சத்தியத்தை, அழகை, அன்பை, அமரவாழ்வை அநுபவிக்கலாம்' என்று கண்டவர் கிருஷ்ண மூர்த்தி.

அவர் மூலம் மகா சக்தியின் ஒளியைப் பரப்புவதற்காக 'கிழக்குத் தாரகை' என்ற இயக்கத்தை தொடங்கியிருந்தார் அம்மையார் அன்னி பெஸண்ட். ஆனால் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியோ, இயக்குபவர், இயக்குவிக்கப்படுகிறவர் என்பதெல்லாம் பொருளற்றவை எனக் கருதினார். அவரவரும், அவ்வப்போது உள்ளத்தில் பரிபூரணமான ஈடுபாடு கொண்டால் அதுவே உண்மை வாழ்வு இந்த ஈடுபாட்டை வெளிவிஷயங்களால்—சமயத்தால், சம்பிரதாயத்தால், ஆசாரத்தால், ஆசாரியரால்-ஏற்படுத்த முடியாது எனக்கூறி ''மகாசக்தியின் அவதாரம்'' ''இரண்டாவது மெஸய்யா' என்ற அந்தஸ்த்தையும் அநாசயமாகத் தியாகம் செய்து விட்டதுடன் 'கிழக்குத்தாரகை' ஸ்தாபனத்தையும் கலைத்து விட்டார். அதிலிருந்து அவரது வரலாறு அன்பின் வரலாறாக அமைதியின் வரலாறாக உள்ளது. உண்மையான பேரானந்தத்தை அநுபவித்து அந்த உன்னத நிலையை உலகம் எய்திட எளிமையான, இனிமையான முறையில் சத்தியத்தை உணர்ந்திட வேண்டுமென எடுத்தியம்பி உலகப் பவனி சென்றவாருள்ளார் இந்த ஒப்பற்ற மகா புருடர்.

கிருஷ்ணஜி சத்திய நிலையை வார்த்தையால் மட்டும் உணர்த்தி விழிப்பூட்டவில்லை; தம் வாழ்க்கையாலேயே விழிப்பூட்டுகிறார். நாம் இமயமாக உயர முடியாமல் போகலாம். எனினும் இமயத்தைக் கண்டு நம் மனம் பூரிக்கிறதல்லவா! உணர்வில் இமயம் கிருஷ்ணஜி.

அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் என்னுமிடத்திலும், ஓஜாய் பிரதேசத்திலும், சிற்சில மாதங்கள் தங்கும் இந்த மகாத்மனின் தத்துவத்தை இன்று உலகம் உணருகிறது- 78-ம் வயதை எட்டி வாழும் கிருஷ்ணஜி போல், பரிபூரணானந்தத்தில் திளைக்கும் பரம புருடர் இன்று இவ்வுலகில் அவர் ஒருவரே. வாழிய கிருஷ்ணஜி.

---

— உழைப்பு ஒவ்வொருவரினதும் உடைமை. அதுவே அவனது தன்மையை, தகுதியை, திறமையை எடுத்துக் காட்டுகிறது. நாம் இன்றைய உலகில் சந்தர்ப்பவாதிகளையும், வாய்ப்பேச்சு வீரர்களையும் கண்டு வருகிறோம். உண்மையில், எவர் ஒருவர் தனது தொழிலில் கண்ணுங் கருத்துமாக இருக்கிறாரோ அவரே வெற்றி வாழ்க்கையை எய்துகிறவராவார். அவ்விதம் ஆர்வமும், ஆற்றலுமிக்க ஒரு சில இலட்சம் மக்களால்தான் உலகமே இயங்குகிறது.



# மலையகத்தில் மாதர் இயக்கம்

—பாக்கியம் அலக்சாந்தர்—

உள்நாட்டு உற்பத்திக்கு மூலதனமாக விளங்கும் தேயிலையின் நறுமணத்தையும் அதன் தெவிட்டாத உருசியையும் அனுபவிக்காதவரே இல்லை.

இற்றைக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகளுக்கு முன் செம்மண்ணை காட்டிக்கொண்டிருந்த தேயிலைத் தோட்டங்கள் இன்று எங்கு பார்த்தாலும் ஒரே பச்சைப் பாய் விரித்தாற்போல் செழித்தோங்கி பசுமை குன்றாது திகழ்கிறது.

ஒரு காலத்தில் தமிழகத்திலிருந்து வந்த மக்கள் மலையகத்தில் குடியேறினர். அன்று வந்தவர்கள் இன்றும் அதே மலைநாட்டு மண்ணுக்கு இரையாகி, சந்ததியினரையும் விருத்தி செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர் தம் வாழ்வில் எந்தவித முன்னேற்றத்தையும் காணமுடிகிறதா? இன்று தேயிலை தோட்டங்களில் வாழும் மக்களில் நாலில் இரண்டு வீதமானோர் பெண்கள். இவர்கள் மாடாய் உழைத்து உருக்குலைந்தது தான் மிச்சம். இன்று உலகத்தில் அதிக நேரம் வேலை செய்பவர்கள் இந்த மலைநாட்டுப் பெண்களேயாவர். குறைந்த பட்சம் பதிமூன்று மணி நேரம் இவர்கள் வேலை செய்கின்றனர். ஓய்வு என்பதை இவர்களால் நினைத்துப் பார்க்கவும் முடியாது. இப்படிப் பாடுபட்டு உழைப்பதால் தான் இன்று இலங்கையின் உற்பத்தி வருவாயை நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் தேடிக் கொடுக்கின்றனர். எந்த இலாபத்தைப் பெற்றுக்கொடுத்த போதிலும், இவர்கள் பெறும் நன்மை ஒன்றுமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இந்தப் பெண்களின் நிலைமையைச் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால் எல்லாம் வேதனை நிறைந்ததாகத் தான் இருக்கும். காலை ஆறுமணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் மழை என்றும் வெய்யில் என்றும் பாராமல் சுமை தாங்கிக் கூடைகளை தலையில் மாட்டிக்கொண்டு அந்த கரடுமுரடான மலை உச்சி வரை ஏறி இறங்கும் பெண்மணிகள் காய்ச்சல் தலையிடி எதையும் பொருட்படுத்துவதில்லை இப்படி நெற்றி வியர்வையைச்சிந்தி பாடு படும் வயிறார உண்ணும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாது.

சில பெண்கள் வீட்டுக்குத் தொலையில் மலை இருந்தால் மத்தியானம் சாப்பாட்டையே மறந்து விடுவார்கள். அவர்களுக்கு மலையில் வைத்து உணவு கொடுக்க வசதியிருப்பதில்லை. இப்படித் தங்கள் உடல் சுகம் எதையும் பேணாது உழைப்பது தான் கண்ட பயன். கடும் உழைப்பால் உடல் இளைத்து நோய்க்கு ஆளாகின்றனர். பிரசவக் காலத்திலும் இவர்கள் கஸ்டப்பட்டு உழைப்பதால் இன்று பெருகிவரும் குறைமாத பிரசவத்தில் முதல் இடம் பெறுகின்றனர். அப்படியே பத்து மாதம் சுமந்து பெற்ற செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களும் எவ்வித சுகாதார மும் இல்லாமல் எலும்புந்தோலுமாக வளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்படுகின்றனர். இன்று குழந்தைகளின் இறப்பு விகிதம் மலைநாட்டில் அதிகரித்து வருகிறது.

மலையகப் பெண்கள் படும் துயருக்கு எல்லையே இல்லை. இந்த நிலையிலும் ஒரு சில பெண்மணிகள் எழுத வாசிக்கக் கற்றுள்ளனர். இதைவிட அவர்களால் இன்றைய சூழலில் என்ன செய்ய முடியும்.

மலையகப் பெண்களின் நிலைமை கீழ் மட்டத்திற்குப் போய் விட்டது. இவற்றைவிட அவர்களின் சுகாதர வசதிகளும் மிக மிக மோசமான நிலையிலுள்ளன.

இந்தப் பெண்களுக்கு உடுக்கவும் நல்லுடைகள் ஒன்று அல்லது இரண்டுக்கு மேல் இருக்காது. குழந்தைகளுக்கும் அதே நிலை தான். உலகத்தில் நடைபெறும் வினோதங்கள் அதிசயங்கள் காட்சிகள் இவற்றை இவர்களால் காணத்தான் முடியுமா! ஏதோ அத்தி பூத்தாற் போல் தீபாவளி பொங்கல் திருநாட்கள்.

இப்படியே இந்த மக்களின் காலம் போய்க்கொண்டிருக்கின்றது. மலையக பெண்களின் நிலைமை கீழ் நோக்கி போவதற்குக் காரணம் தோட்டங்களில் பெண்களுக்கு எந்த விதமான உதவி தேவை என விளக்கிக் கூறி அதற்கான வழி வகைகளை அமைத்துக் கொடுக்கவோ ஆலோசனைகளைக் கூறவோ மாதர் இயக்கங்கள் இல்லாமையே. ஒரு பெண்ணால்தான் மற்ற பெண்ணின் நிலைமையை உணரலாம் பெண்களுக்காக வாதாட எத்தனையோ விஷயங்கள் உண்டு. மலைநாட்டுப் பெண்களால் தங்கள் குழந்தையை பராமரிக்க நேரமுண்டா? இந்த அவலநிலை நீடிக்காமல் மலைநாட்டுப் பெண்கள் சுபீட்ச வாழ்வு அடைய வேண்டுமானால் நிச்சயம் மாதர் இயக்கங்கள் அமைத்திட வேண்டும் மலையகப் பெண்கள் புத்துயிர் பெற்று விழித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் மலையக மக்கள் வாழ்விலும் விடிவு காலம் தோன்றும் எனவே மாதர் இயக்கங்கள் மலையகத்தில் ஆரம்பமாகட்டும்.

---

— ஒவ்வொருவனும் தனது ஆற்றலை உயர்வாகவே கருதுகிறான். இந்த உயர்ந்த எண்ணத்தை மட்டும் கொண்டிருப்பதால் பயனில்லை. ஆனால் அந்த ஆற்றலில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திடவேண்டும். அந்த நம்பிக்கை ஒன்றே அவன் ஆற்றலை மேலும் பெருக்கும். நம்பிக்கையற்ற ஆற்றல் எத்தனை உயர்ந்ததாயினும் அது உறுதியாக நிலைப்பதில்லை.

— ஒருவரை மகிழச் செய்யும் அளவு நீ மகிழ்வடைகிறாய். அதுவே நியதியாகும். பிறரை மகிழ்விக்கும்போது உனது மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது. அதனை உள்ளடக்கிவிட்டால் குறைந்து வற்றி விடுகிறது. உண்மையில் பிறருக்கு உன் மகிழ்வை ஈயாவிட்டால் அது உன்னிலும் உலர்ந்துவிடும். மகிழ்வைக் கொடுப்பதால் நீ நம்பமுடியாத அளவுக்கு உன்னுள் மசிழ்ச்சி பொங்கிப் பெருகும்.

★ ★



# அமரர் உறங்கும் இடம்

—அநுராதன்

அண்ணல் காந்தியால் பாரதமும், அண்ணாவால் தமிழ் நாடும், ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்காவும் பெருமை பெற்றது போல அமரர் வெள்ளையனால் மலையகம் பெருமை பெற்றது.

பார்க்குமிடமெல்லாம் பசுந் தேயிலைகள், அம்மலைகளினிடையே சல சலவென ஓடும் சிற்றருவிகள் ஓர் மூன்றடுக்குத் தொழிற்சாலை. இடையே ஒரு சில லயங்கள், அட்டன் — டிக்கோயா நீண்ட தெரு இவற்றுக்கிடையே மலையக மண்ணில் உதித்து, வளர்ந்து, பயின்று, வாழ்ந்து, உறைதலை வெறுத்து, உண்டியை வெறுத்து, உற்றார் உறவினரை வெறுத்து, ஈற்றில் இவ்வுலகையே வெறுத்து தனது உடலையும் மலையகத் தொழிலாளர்களை வாழவைக்கும் மலையகமண்ணுக்கே அர்ப்பணித்து விட்டேன் என்று சொல்வது போல உறங்கிக் கொண்டிருக்கின்றார் அமரர் வெள்ளையன்.

அவர் உறங்கும் இடம்— அது தான் அழகிய சின்னஞ் சிறு நகர் டிக்கோயா. அட்டனுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் இந் நகரம் 1972 டிசம்பர் 4ம் திகதி முதல் தனிப் பெருமையுடன் மிளிர்கிறது. எத்தனையோ பெரு நகர்களிருந்தும், வசதியான பல இடங்கள் இருந்தும், இச்சிறு நகரை தனது உறைவிடமாகக் கொண்டு அமரர் மீளாத் துயிலில் இருக்கின்றார்.

அமரர் மறைந்து இரு வருடங்கள் கடந்து விட்டன. அவர் நினைவாக ஞாபக ஸ்தூபியும் எழுப்பப்பட்டு விட்டது

எண்ணற்ற தொழிலாளர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் ஆகியோரின் நெஞ்சங்களிலே நீங்காது நிலைத்துவிட்ட அமரர் வெள்ளையன் அவர்களின் ஞாபகச் சின்னம் அவரது இலட்சியங்களை என்றென்றும் வலியுறுத்திக்கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

---

★ மர்ஜுவானா அல்லது எல். எஸ். டி. என்ற போதைப் பொருள் பாவித்தவரின் மனத்தையே மாற்றி விடுவதுடன், தசைகளில் கோளாறுகளையும் ஏற்படுத்தி விடுகிறது. இதனை பாவிப்பவர், தன்னிலை இழந்து, ஞாபக சக்தி இல்லாதவராகிவிடுகின்றார். மனோ சக்தியை மர்ஜுவானா பாழாக்கி விடுகிறது. மர்ஜுவானா அல்லது எஸ். எஸ். டி. போதைவஸ்த்தை அருந்தியவர்களை மனநோயாளரைப் போல எண்ணி மிக்க கவனமாகக் குணப்படுத்த வேண்டும்.

★ ஆணவமும், அகந்தையும், அடக்கமின்மையும், தற்பெருமையும் குடும்பப் பெண்களுக்கு உகந்த பண்புகளாக முடியாது. குடும்பத்தைத் தாழ்த்திடவும், வாழவைத்திடவும் குடும்பப் பெண்களின் செயல்களே காரணங்களாகின்றன. ஒரு குடும்பம் நல்ல குடும்பமாகத் திகழ வேண்டுமானால் குடும்பத் தலைவி பொறுமையை அணிகலனாகவும், சகிப்புத்தன்மையை அதிகாரமாகவும் மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சிக்கப்படும் மலையகம்

(அமரர். வி. கே. வெள்ளையன்)

மலையகத்தின் மாண்புமிக்க உணர்வுகளைத் தன்னுணர்வாகத் தாங்கித் தியாக உள்ளம் படைத்த தளபதி திரு. வி.கே. வெள்ளையன் அமரராகிவிட்ட போதிலும், அவரது உணர்வுகளால் நாம் உந்தப் படுகிறோம். மலையக மக்களின் துயர் துடைத்திடத் துணிந்த அன்னாரின் இதயக்குரலை அவரது இக்கட்டுரை எதிரொலிக்கிறது.

மலையக மககள் பல்வேறு வகைகளில் தொடக்கத்தி லிருந்தே வஞ்சிக்கப்பட்டு வந்துள்ளனர். இவர்களு க்கு விடுதலை என்றால் என்ன என்பது கூட அறியத் தரும் வாய்ப்புகளை பிரித்தானிய காலனி ஆட்சி மறுத்து வந்தது. தனிப்பட்ட சுயநலவாதிகளாலும், சந்தர்ப்பப் பேர்வழிகளாலும் இவர்கள் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்டு வருவாராயினர். இந்தச் சூழ் நிலையில் அரசியல் கட்சிகள் தலை எடுத்தன. அவற்றி னால் தொழிற் சங்கங்களும் பிறக்கத் தொடங்கின.

## தோட்டத்தில் தொழிற் சங்கம்

இலங்கையில் முக்கியமாகத் தொட்டப்புறங்களில் தொழிற்சங்க இயக்கங்கள் அரசியல் நிறுவனங்கள் மூலமே முளைவிடத் தொடங்கின. முதலாவதாக இலங்கை இந்திய பிரச்சினையை யோட்டி ஆரம்பிக்கப் பட்ட அரசியல் நிறுவனம், தனது கொள்கைகளைத் தோட்டப் புறங்களில் பரப்புவதற்கு முடியாதவாறு, தோட்ட நிர்வாகங்கள் செயல்பட்டன. அதனால் அர சியல் நிறுவனங்களின் இலட்சியங்கள் தொழிற் சங் கங்களின் மூலம் தோட்டங்களில் பிரச்சாரப்படுத்தப் பட்டன.

இவ்வாறு பல்வேறு அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்களை உருவாக்கித் தோட்டங்களுக்குள் புகுந் தன. சுயநலவாதிகளும், அரசியல் பதவி விரும்பி களும், தத்தம் நலன்களுக்காகத் தொழிற்சங்கங்களை அமைத்தனர். அந்தத் தொழிற்சங்கங்கள் தனிப்பட் டோரின் அரசியல் செல்வாக்குக்காக மட்டுமல்லாது அவர்களின் சொந்த இலாபத்திற்காகவே இயங்க லாயின.

தொழிற்சங்கமென்ற பெயரில் தொழிலாளர்களை ஏய்த்துத் தவறான வியாபாரங்களைச் செய்ததினால் பல தொழிற்சங்கங்கள் பிரிவுபட்டு வீழ்ச்சியடைந் தன. இந்தகைய பிரிவுப் பகை—போட்டிகளைச் சாதகமாக்கிக்கொண்டு தோட்ட முதலாளிகள் தங் கள் வசதிகள் வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொண்ட னர். இவ்வாறு தொழிலாளர்கள் அவல நிலைக்குள் தள்ளப்பட்டுத் துன்புற்றனர்.





ரஷ்யாவிலுள்ள சப்பாத்துத் தொழிற்சா லைக்குத் திரு.வி.கே. வெள்ளையன் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து இரண்டாவதாக நிற்கிருர் திரு. வெள்ளையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோ தொழிலாளர்கள் பொருளாதாரத்திலும் என்றுமில்லாத பெரும் வீழ்ச்சியுட்பட்டவர்களாயுள்ளனர். கூலிக்கு ஆள் எடுப்பது, தெண்டம் அடிப்பது, பேதமில்லாத தண்டனைகள். வேலைப் பளுவைக் கூட்டுதல், விலை வாசிக்கூடுதலுக்கு ஒப்ப சம்பளம் கொடுத்திடாமலிருப்பது ஆகியன தோட்டங்களில் புகுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சங்கம் பொருளாதாரச் சங்கமாகவோ, அல்லது சமுதாயச் சங்கமாகவோ இயங்கவில்லை. ஆனால், தொழிலாளர் தங்கள் குறைபாடுகளை நிவர்த்தி பண்ணுவதற்காக கூட்டப்பட்டவைகளாகும். பல தொழிற் சங்கங்களின் தோற்றமே தொழிலாளர்களின் அறியாமைக்கு ஏற்ப, அவர்களைத் திருப்திபடுத்திடச்செயல்பட்டனவேயல்லாது அவர்களின் பொருளாதாரச், சமுதாய உரிமைகளுக்காகச் செயல்படவில்லை. தொழிற் சங்கங்களை வேண்டியபோது மாற்றிக்கொள்ளும் காரணத்தால் உறுதியான ஒரு நிலை தொழிலாளர்களுக்கும் ஏற்படவில்லை. சந்திரனைப் பிடித்து வந்து தருகிறோம் என்று ஆசை காட்டிய தொழிற்சங்கங்களின் வாக்குறுதிகளும் தேயிலை விலை உயர்வையும் வீழ்ச்சியையும் சம்பந்தப்படுத்தியவாறு செல்லாக்காசாகிப் போயின. தொழிலாளர்கள் பலவகையாலும் சந்தர்ப்பவாதிகளால் வஞ்சிக்கப்பட்டனர்.

## வாலிபர் நிலை

இப்போது வாலிபர்கள் இந்த அவல நிலையை உணர்ந்து கொண்டாலும், பல்வேறு அரசியல் பேச்சுக்களால் மயக்குறும், வாக்குறுதிகளால் உந்தப்பட்டும் பிரமையுள் தடுமாறுகிறவர்களாகவும், சினிமா மோகத்தில் வசப்பட்டவர்களாகவும் உள்ளனர். எழுத்தறிவுடையவர்களும் மஞ்சள் பத்திரிகைகளால் வசியப்பட்டுக் காம நூல்களில், கவனஞ் செலுத்துகிறவர்களாகிவிட்டனர்.

அரசியல் வெளிப்பகட்டுப் பேச்சாலும், சினிமாப்படங்களின் வசனத்தாலும், வாசிக்கும் கீழ்த்தரமான வெளியீடுகளாலும் கவரப்பட்ட மலையக இளைஞர் தீயவழிகளில் ஈடுபட்டவராகிவிட்டனர். குடியிலும் சூதாட்டத்திலும் காலத்தைப் பாழாக்குவதில் நாளுக்கு நாள் தீவிரமாகி வளருகின்றனர் இந்த வாலிபர்கள்.

கோவிலையும், வழிபாட்டையும் அவர்கள் விலக்கிவிட்டனர். பொலிஸ் நிலையமும், தொழிற் சங்கக் காரியாலயமும், தொழிற் காரியாலயமும் அவர்களுக்குக் கோயில்களாகவும், வழிபாடுக்குரியனவாகவும் உள்ளன. குடும்பம் ஒரு தொல்லையாக அவர்களுக்குப்படுகின்றது. நன்று உடுக்கவும், பார்வைக்கு நாகரிகமாகத்தோற்றமளிக்கவும் விரும்புகிறார்கள். ஆனால் வாய் திறந்தாலோ அவர்கள் தோற்றத்திற்கு எதிர்மறையான பேச்சுக்களே பொழியும். இவர்களது ஓய்வு நேரங்களில் கேலிப் பேச்சுக்களும் ஓரளவு சண்டித்தனமும் உண்டு.

இப்படியாக வாலிபர்களின் வளர்ச்சி இருந்தாலும் எமது நம்பிக்கைக்கு ஆதாரமாக வளர்ச்சியடைந்து வரும் வாலிபர்களும் இல்லாமலில்லை. இவர்கள் குடும்பத்தில் அக்கறை காட்டுகிறார்கள். தொழிலாளர்களின் சுகவாழ்வில் அக்கறை காட்டுகிறார்கள். தொழிற்சங்க வளர்ச்சிக்காகவும், கல்வி, கலை, கலாச்சார சமய நிகழ்ச்சிகளில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள். நல்லெண்ணமும், இளைஞரின் உணர்வுந்தல்களும் முற்றாகவே பாழ்பட்டு விடவில்லை. ஆயினும் உண்மையான நிறுவன ரீதியில் பலனுடைய கல்வியையும், பயிற்சியையும், இவர்களுக்கு அளித்தால் இந்த நாட்டின் பொருளாதார சமுதாய வளர்ச்சியில் பொறுப்பான எதிர் காலத்தை ஆக்கும் வலிமையுடையவர்களாவார்கள் அவர்கள்.

மலையக வாலிபர்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்லும் வில்லர்கள் பலரால் மலையக வாலிபர்களின் அமைதியான வாழ்வு பாழாக்கப்பட்டு வருகிறது. ஆங்காங்கு வாலிபர் முன்னணிகளை ஆரம்பித்து அவைகளைத் தொழிற் சங்கங்களுடன் மோதவிட எத்தனிப்பதால் இந்த வில்லர்களால் ஆரம்பிக்கப்படும் இத்தகைய வாலிப முன்னணிகள் மங்கி மறைந்து விடுகின்றன.

வாலிபர்களுக்குத் திடமிக்க தளபதி தேவை. வாலிபர்களைப் பொறுப்புமிக்கவர்களாக ஆக்கிடும் ஆற்றலும், அவர்களுக்கு குடி உரிமை பற்றிய கல்வியும், ஈந்து வலிமையும் தீரமும்மிக்கவர்களாக உருவாக்கிடக்கூடிய தளபதி மிகவும் அவசியமாகும்.

## கல்வி

தோட்டப்பாடசாலைக் கல்வி ஒரு கண் துடைப்பு வேடிக்கை. மாணவர்கள் வாசிக்கத் தெரிந்து கொள்வார்கள். ஆனால் விளக்கம் கூற அறியார்கள். சாதாரணமாக எழுதவும், கணக்குக் கூட்டவுமே அவர்கள் படிப்பிக்கப்படுகின்றனர். தோட்ட முதலாளிகள் தோட்டப் பிள்ளைகள் படிப்புக்கு உதவியளிப்பதல்லை. கல்வியறிவில்லாத, பகுத்தறியும் ஆற்றலில்லாத தொழிலாளர்கள்தாம் அவர்களுக்குத் தேவை என்பதால் தோட்டப் பாடசாலைகளைக் கவனிப்பதில்லை. தோட்டப் பாடசாலை சுட்டிப் பிள்ளைகளின் விளையாட்டுத் தளமாகியுள்ளன. சுதந்திரமாகவும், ஜனநாயக நாடாகவும் இருக்கும் இலங்கை, பிரித்தானிய காலனி ஆட்சி முறைகளால் பெரிய இலாபத்தை எதிர்பார்த்து இருப்பதில் மட்டும் கவனஞ் செலுத்துகிறதன்றி தொழிலாளர் நல்வாழ்வில் கவனஞ் செலுத்திடவில்லை.

தோட்டப்பாடசாலைகளில் பொதுவாகவே, 30, 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் மட்டுமே இரண்டு மணி நேரத்துள், வாசிப்பு, எழுத்து, கணக்கு ஆகியனவற்றைச் சொல்லித்தரவேண்டியுள்ளது.

பட்டணத்தில் சென்று படித்தவர்களுக்கும் தோட்டப்புறங்களில் நுழையும் வாய்ப்பு தடுக்கப்படுகிறது. தமிழ்ப் பாடசாலைகளும், தமிழ்ப் பிரிவுகளும், தமிழாசிரியர்கள் இல்லை என்ற போலிக் காரணங்களால் மூடப்படுகின்றன. இடவசதிகளுக்காகவே இந்த மூடுதல்கள் நிகழ்த்தப்படுகின்றன. புதிய பாடசாலைகளைத் தொடங்குவதற்குத்தோட்டங்களில் அனுமதி கிடைப்பதில்லை.

தோட்டப் பள்ளிக் கல்வி என்பதைக் கூறுமிடத்து "சமுதாயத்திற்கு இழைக்கப்படும் பெருந்தீங்கு" என்றே கூறலாம். கல்வியறிவில்லாமை தோட்டப் பிள்ளைகளிடம் கூடுதலாக உள்ளது. யூனஸ்கோவின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாக நடக்கும் இலங்கை அரசு கண்கெட்ட நிலையில் இருப்பது

(37ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவை கண்ட குடியாட்சி

கே. கணபதி
(இளைஞர் குழு தலைவர்)

ஔவையார் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். அவ்வையின் பாடல் நூல்கள் பலவாருக நம்மிடையே உலவி வருகின்றன. தனிப்பாடல் திரட்டு என்னும் நூலிலும் அவ்வையின் பெயரால் சில பாடல்கள் காணப்படுகின்றன. "நூலில் எனிலோ கோல்சாயும்" எனத் துவங்கும் வெண்பா தொழிலரசு கொள்கையை வற்புறுத்துகின்றது.

பண்டைத் தமிழகத்தில் தமிழினம் நால்வகை உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்பன. அரசர் நாடாள்வது அந்தணர் வேதம் ஓதுவது. வணிகர் வியாபாரம் செய்வது. வேளாளர் பொருள் உற்பத்தி செய்வது. இப்படி நான்கு வகையில் தொழில் முறைகள் வகுக்கப்பட்டிருந்தன.

தனிப்பாடல் திரட்டில் அவ்வையின் பெயரால் காணப்படும் மேற்கூறிய வெண்பாவில் குறிப்பிட்ட நால்வகைப் பிரிவில் யார் அரசு செலுத்த தகுதி பெற்ரோர் என்பதைச் சிலேடையாகக்கூறுவதைப் பார்ப்போம்.

"நூலினிலோ கோல்சாயும்
நூந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்-நாலாவான்,
மந்திரியும் ஆவான்வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு".

இப்போது வெண்பாவின் உட்கருத்தைப் பார்ப்போம். "நூலினிலோ கோல் சாயும்" கலையுரைத்த கற்பனைகளை நிலையெனக் கொண்டாடித் தமது மதமே பெரிதென வாதிடும் மதவாதிகளின் சாத்திர நூலறிவும், கோத்திரப் பிரிவினைக் கொள்கைகளும் செங்கோல் முறைமைக்கு இழுக்கேற்படுத்துமாதலின் அவ்வகையோர் ஆட்சி செயத்தக்கவரல்லர் என்னும் கருத்தும்,

"நூந்தமரேல் வெஞ்சமராம்" என்பதில் பொறுமையும் அமைதியும் அற்றவர்களாகிய கடித்திரியர் போர்த் தொழில் புரிகிறவர்கள்; அவர்கள் ஆட்சி செய்தால் போர்வழிப் புகழ்தேடுவதற்காகவே போர் தொடுக்கும் பணிகளில் ஆட்சியை ஈடுபடுத்துவர். ஆதலின் இவ்வகையோரும் ஆட்சி செயத்தக்கவராகார் என்றும்,

"கோலெனிலோ ஆங்கே குடிசாயும்" துலாக்கோலை ஏந்தும் வர்த்தகர்கள் ஆட்சிபுரிந்தால் குடிமக்கள் அல்லலுறுவர் என்பது அடிப்படைக் கருத்து. வியாபாரிகள் சொந்த இலாபத்தையே கருதி வாழ்கிறவர்கள். அதனுல் அவ்வகை வர்த்தகரிடம் அரசு புரியும் அதிகாரம் சேருமானுல், பொருளாதாரச் சமத்துவம் சாயும். ஆகவே வர்த்தகரிடமும் அரசு அதிகாரம் செய்வது தக்கதாகாது என்றும் கூறிவிட்டு கவிஞர் நாலாவதாகக் குறிப்பிட்ட பிரிவைப் பற்றிக் கூறுகிருர்.

....."நாலாவான்" மந்திரியும் ஆவான், வழிக்குத் துணையாவான், அதாவது தொழிலாளர் எனப்படும் நாலாவது பிரிவினராகிய இவர்களில் நல்லறிஞரும், முன்னறிந்து கூறும் ஆற்றல் மிக்கோரும், உழைப்பினுல் உண்டிக்கு வழிசெய்வோரும், பக்கத்துணையாக இருந்து பாதுகாத்திடும் உள்ளன்பு மிக்கோரும் நன்றியுடையவர்களும், அறிந்து, ஆய்ந்து, ஆற்றல் மிக்கவராக பணிவு என்னும் பண்பு பூண்டு, பசித்தோர் பசி தீர்க்கும் பரிவுளம் கொண்டோரும், மக்களின் இன்ப துன்பங்களை. அவர்களின் . வாழ்க்கை அநுபவங்களை செயலளவில் கண்டு உண்மை உணர்ந்தோரும், எது நியதி என உணர்ந்து பொறுமை எனும் வாழ்வில் புதுமை பொழிந்திடச் செய்வோரும், கலை. கல்வி, கலாச்சாரம் முதலியவைகளைக் கட்டிக் காப்போரும் நிறைந்து விளங்குவதால் இவர்களின் வழிவந்தோரே மந்திரியாகவும், வழித்துணையாகவும் இருக்கும் தகுதியுடையவராதலின் இவர்கள் நடாத்தும் அரசுதான் சரியான அரசு என்பதை "அந்த அரசே அரசு" என்று கூறி அழகான முத்தாய்ப்பு வைத்துள்ளார் கவிஞர்.

இதனையே முன் வேத காலத்திலும் வலியுறுத்தினர். அந்தணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என அக்காலத்தில் நால் வருணங்கள் செய்து உலகச் சமுதாய நடப்புக்கு வழி வகுத்தனராயினும் காலவேகத்தில் இவ்வருண பேதங்கள் யாவும், மதவாதிகளாலும் அதிகார வெறியர்களாலும், சாத்திர கோத்திர பேதப் பிரிவினராலும் சாதிப் பிரிவுகளாக மாறி வழக்கொழிந்தன. சாதனைகளை எல்லாம் சாதிகளாக உருவாக்கியமையாலும் தொழிலாளர் எனப்படும் சூத்திரரின் தகைமையை மூடிமறைத்து வந்தமையாலும். குடிமக்களின் பெருமையே தோற்றுமலிருந்தது. குடியாட்சிக்கு நால் வருணத்தினரில் நாலாவதாக வரும் தொழிலாளரே ஏற்றவர் என்பதே வெண்பாவின் கருத்து. இதனைத் தான் தொழிலாளர் ஆட்சி என்று ஔவை கூறியிருக்கிருர்.

தொழிலாளர் தேசிய சங்கம் இன்று இவ்வகைக் கொள்கைகளையே இலட்சியமாகக் கொண்டு திகழ்கிறது என்பதை இன்றைய இளைஞர்கள் மிகுந்த அக்கறையுடன் கவனிக்கிருர்கள். தொழிலாளர் ஆட்சி இந்நாட்டில் நிலவ ஆவன செய்திடத் துணிவோமாக.

---

வஞ்சிக்கப்பட்ட..35பக்:தொடர்ச்சி

.......... ............... ...

வெட்கப்படவேண்டியதாகும். இந்திய அரசு இந்த அவல நிலையை காணுதது போல இருக்கக் கூடாது. கல்வியறிவில்லாத ஐந்தேகால் இலட்சம் மலையக மக்களை 15 ஆண்டுகளில் எடுத்துக்கொள்கின்ற எண்ணத்தால் பாராமுகமாக இருப்பது பெரும் அநீதி. இது மட்டுமல்ல, வீட்டு வசதி, கல்வி வாய்ப்பிலும் பார்க்க மிக மிக மோசம்.

தோட்டப் புறங்களில் வெளியார் பிரத்தியேக மருத்துவ மனைகளும், டாக்டர்களும். வைத்திய சாலைகளும், ஆரம்பித்திருப்பது மட்டும் எதற்காக? வெளியார் பிரத்தியேக பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து பயிற்றுவிக்க உயர்ந்த கட்டணம் வசூலிப்பது மட்டும் எதற்காக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நம்பிக்கை

அ. தங்கராசா.

மலையக மக்கள் உழைப்பாளிகள். அவர்களை இழிவாகநடத்தி உதாசீனப்படுத்துகிறது அரசு. பிறரின் நல் வாழ்வுக்காகவே தங்களின் வாழ்க்கையை அடிமைப்படுத்திக் கொண்டவர்கள் அவர்கள்.

திறமை மிக்க உடல் உழைப்புத் தொழிலாளர்களான மலையக மக்களின் வலுவேறிய கரங்களும்,ஓய்வின்றி நடைபயிற்றப்பட்ட கால்களும், சுமைதாங்கித் தழும்பேறிய தலைகளும்— தோள்களும் இன்று தோட்ட நிர்வாகங்களின் ''வேலை நாட் குறைப்பு'' திட்டத்தினுல் கட்டுப்பட்டவையாயின.

உழைப்புரிமை கட்டுப்படுத்தப்பட்டதால் கொள்ளைகள்— கொலைகள், பலாத்காரம்— விபச்சாரம், களவு— பொய் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வீழ்ச்சியை ருசுப்படுத்தி வருகின்றன.

உடல் உழைப்புத் தொழிலாளர்களின் போராட்டங்கள் சக்தி வாய்ந்தது. பலமுள்ளது. தயார் செய்யப்படாததும், தெளிவில்லாததும், சிதறிய போராட்டங்களும் தொழிலாளர்களுக்கு நன்மையை தேடிக் கொடுக்காது என்பதை சமீப நாட்களாக ''போராட்டம்'' என்ற பெயரில் மலையகத்தில் நடந்தேறிய ஆட்டங்களிலிருந்து உணர முடிகிறது. இவ்வித மயக்க நிலையிலிருந்து புதிய வழியில் மலையகத் தொழிலாளியை தொ. தே. சங்கம் வழி நடத்துகிறது.

சிதறிக் கிடந்த தொழிலாளர்களையும் தொழிற் சங்கங்களையும் ஒரு முகப்படுத்திய பெருமை தொழிலாளர் தேசிய சங்கத்தையே சாரும். தொழிலாளர் தேசிய சங்கத்தின் அமைப்பு முறை, இயக்கத்தில் தொழிலாளர்களின் பங்குகள் தூய்மையான சேவை போன்றவைகளே இதற்கு அத்திவாரமாக அமைந்தன.

தொழிலாளர் தேசிய சங்கம் கேட்பது தொழிலாளர்களின் நல உரிமைகள். உழைப்புக்கேற்ற சம்பளம் கேட்கும் தொழிலாளர்கள் இன்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். மலையகத் தொழிலாளர்களுக்கென்று இயற்றப்பட்ட நல் வாழ்வுச் சட்டங்களையெல்லாம் தொழிலாளர் தேசிய சங்கம் மீண்டும் ஞாபகத்திற்குக் கொணருகிறது.

உழைக்கத்தயாராகஇருக்கிறுர்கள் மலையகத் தொழிலாளர்கள். உற்பத்தியைப் பெருக்கி நாட்டையும், நாட்டு மக்களையும் கஸ்டத்திலிருந்து காப்பாற்ற அணிவகுத்து நிற்கின்ருர்கள். அவர்களின் தேவைகளை உரிமைகளைதாமதமின்றி நிறைவேற்றி வைப்பது சம்பந்தப் பட்ட பகுதியினரின் கடமையாகும். இதனையே தொழிலாளர் தேசிய சங்கம் வற்புறுத்தி வருகின்றது.

தொழிலாளர் தேசிய சங்கத் தலைமையால்— ஒரு முகப்பட்ட உரிமைப்போராட்டம் மலையக மக்கள் மத்தியில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்ற புதிய நம்பிக்கையுடன் ஒன்றிணைந்து செயல் படுவோமாக.



# நியாயம் எது ?

— சாரல் நாடன் —

மலையகத்தமிழர், இந்தியத் தமிழர் என்றே இன்னும் இனம் பிரிக்கப்படுகின்றனர். இந்திய பிரஜையாவதற்கு விண்ணப்பித்தவர்கள், இலங்கை பிரஜையாவதற்கு விண்ணப்பித்தவர்கள், பதிவு செய்து கொண்டவர்கள், இரு நாட்டுப் பிரஜையாகாதவர்கள் என்ற முத்தரத்தார் இந்த பிரிவில் அடங்குவர்.

சட்டரீதியாக, இந்நாட்டின் பிரஜையானவர்கள் தங்கள் தாய் நாடு இலங்கை என்பதால் தங்களை இலங்கையர் என்று இனம் காட்டிக்கொள்ள விரும்புவது இயற்கை. ஆனுல், அவ்விதம் செய்வது தவறு என்றும் குற்றம் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது,

ஆக, இந்தியத் தமிழர் என்ற சமூகப் பிரிவு-அரசியல் சமத்துவம் கிட்டும் வரையில் தொடர்ந்தும் இந்நாட்டில் இருக்கப் போவது நிதர்சனம். தீவிர அரசியல்வாதிகளினதும், வகுப்புவாதிகளினதும் இந்திய வெறுப்புணர்வு இதனுல் மேலும் தலை தூக்கலாம்.

மொழி, கலாச்சாரம், மதம், வம்சாவளித் தொடர்பு, உறவுமுறை ஆகிய இன்னேரன்னத் தொடர்புகளால் இந்தியத்துவத்தைத் தங்களில் வளர்த்து வந்த இந்தியத் தமிழர்கள் இயல்பாகவே இந்தியத் தலைவர்களின் உருவப் படங்களை தங்கள் வீடுகளில் தொங்க விடுகின்றனர். கொள்கை வழித் தொடர்பால் ரஷ்ய, சீனத் தலைவர்களின் படங்களை எத்தனை இலங்கையர்கள் தமது வீடுகளில் அலங்கரித்து வைத்திருக்கின்றனர். அவர்களின் தலைகள் தாங்கிய அணிமுத்திரையை தங்கள் உடைகளில் அணிந்து கொள்கின்றனர்?

தர்க்க ரீதியில் இரண்டும் ஒரே தரத்தினது என்ருலும் முன்னையதற்கு மாத்திரம் தாய் நாட்டுப் பற்றின்மை என்றும்-தேசத் துரோகம் என்றும் சகட்டு மேனிக்குக் குற்றம் சாட்டப்படுகிறது.

கால மாறுதலுக்கேற்ப கருத்துத் தெளிவும், அரசியல் உணர்வும் பெற்ற மலையகத்தவர்கள் இந்நாட்டு அரசியல் தலைவர்களின் படங்களையும் இன்று தமது வீடுகளில் வைத்திருக்கின்றனர். இந்தியத் தலைவர்களின் படங்களோடு இலங்கைத் தலைவர்களின் படங்களையும் சேர்த்து அலங்கரிக்கச் செய்தமை இந்நாட்டு அரசியல் ஈடுபாட்டின் ஆரம்பத்துக்கு மேலோட்டமான வெளிப்பாடே தவிர முழு முதற் காரணமாகாது.

இந்திய வம்சாவளியினரான மலையகத் தொழிலாளர்கள் தங்களது மேலான உணர்வுகள் நேரிய முறையில் மதிக்கப் படுதல் வேண்டும் என்று எண்ணியதன் விளைவே தம்மை இந்தியாவோடு தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளுடன் ஒப்பிடாமலிருந்திடவிரும்பினர். இதற்கு முனைப்பான உதாரணமாக 'இலங்கை-இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ்' என்ற தொழிற் சங்க நிறுவனத்தின் பெயரையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றி அமைத்ததாகும்.

அமெரிக்க நீக்ரோக்களின் நிலையே மலையகத்தவர் நிலையுமாகும். மறைந்த தலைவர் மாட்டின் லூதர் கிங், தமது அங்கத்தவர்களில் தீவிர போக்குடையவர்கள் "கறுப்பர் ஆட்சி", "கறுப்பர் ஆதிக்கம்" என்று குரலெழுப்பத் தொடங்கியபோது அக் குரல்களின் தொனியிலிருக்கக்கூடிய பகை உணர்வை வெளிப்படுத்தி "கறுப்பர் சமத்துவம்" என்ற சுலோகமே நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு பெற வழி வகுக்கும் என்று அபிப்பிராயப்பட்டார்

மலையகத் தொழிலாளர்களை இன்று இயக்கத் தொடங்கியிருப்பது இந்த நல்லெண்ண உணர்வேயாகும். இந்நாட்டின் பெரும்பான்மைமக்களும், அவர்களின் தலைவர்கள் சிலரும்வேண்டாத அளவுக்கு இந்திய வெறுப்பு மனப்பான்மையை வளர்த்து விட்டிருக்கிறார்கள். இந்தியாவின் அரசியல் நடவடிக்கைகள் எல்லாமே இந்நாட்டின் பலரால் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கப்படுகிறது.

இந்தியவம்சாவளியினரையும் இதே சந்தேகக் கண்ணோடு பார்த்து வெறுப்பை வளர்த்துக் கொள்ள வழி வகுக்கக் கூடாது என்ற உணர்வோடும் நல்லெண்ணத்தோடும் மலையக மக்கள் நியாயமான வழிகளில் இலங்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராகிட முனைந்து நிற்கின்றனர்.

கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்ற சமுக பாகுபாடு இன்னும் இருக்கிறதென்றாலும், பிறப்புரிமை சான்றிதழ்களிலும் பிற விண்ணப்பத் தேவைகளிலும், குறிப்புகளிலும் அவர்களை பிரித்துக் காட்டுவதில்லை. ஆனால் இந்திய வம்சாவளியினர் என்பதற்காக-'இந்தியத் தமிழர்' என்று எல்லா இடங்களிலும் குறிப்பிடப்படுவதில் ஏது நியாயம்?

இலங்கையைத் தாயகமாக வரித்துக் கொண்டவர்களும் இலங்கைத் தாயகத்திலே பிறந்தவர்களும், தங்களை இலங்கையர் என்ற முழு உணர்வோடு சொல்லிக்கொள்ளும் நிலையை அரசியல் சமத்துவம் ருசுப்படுத்த வேண்டும். அது எப்போது நிகழும் என்பதை நாம் ஆக்கப்பூர்வமாக உணர்ந்திட வேண்டும். அன்றுதான் நமது பெருமையும் நிலை நாட்டப்படும்.

---

— ஒவ்வொருவரும் அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்பத் தங்கள் இலட்சியங்களைக்கூட மாற்றிக் கொள்வதில் பின்னிற்பதில்லை. பிறர் நலன்களைப் பாதிக்கும் செயலாயினும் சரி தங்கள் சுய நலத்தையே பெரிதாக மதிப்பவர்களால் எக்காரியத்தையும் நேர்மையாகச் செய்யமுடியாது. இப்படி நேர்மை தவறிய செயல்களால் எந்த பலனும் பூரணமான வெற்றியைத் தராது. உயர்ந்த கொள்கைகளும் பொது நலன் கருதிய செயல்களும் தனி மனிதரின் வசதி வாய்ப்புகளைக் கருதிச் செய்யப்படுவதில்லை யாதலால் அவ்வகைக் கடமைகள் தோல்விகளில் முடிந்தாலுங் கூட உலகம் அதனைத் தாழ்வாகக் கருதுவதில்லை.



# மாவலிச் சித்தர் பதில்

மாவலிச் சித்தரிடம் கேள்வி கேட்டு எழுதுகிறவர்கள் ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் மட்டும் தபாலட்டையில் தெளிவாக எழுதி இதில் காணும் முகவரி கூப்பனை ஒட்டி அனுப்ப வேண்டும். முகவரி கூப்பன் ஒட்டாத தபால் அட்டைகள் கவனிக்கப்படமாட்டாது.

"மாவலிச் சித்தர்"
அறை 1, மாடி 2,
ஃபேவரிட் கட்டிடம்,
காலி வீதி,
கொழும்பு-3.

---

ஏ. பொன்னம்பலம்,
47, சந்தை ரோடு, அட்டன்.

கே. தமிழர்களின் எதிர்காலம் சூண்யம் என்கிறார்களே?...

ப. இந்த உலகமே சூண்யம் என்கிறது சித்தாந்தம். இந்தச் சூண்யத்துள் முக்காலமும் அடங்கும். தமிழர்களுக்கு மட்டும் இந்தச் சூண்யம் சொந்தமன்று. சகல இனத்தவருக்குமே உரிமையானது அது.

எம். செல்லப்பன்,
சோமவத்தை நடுக்கணக்கு,
பூசலாவை.

கே. தொழிலாளர் தேசிய சங்க வளர்ச்சி எதைக் காட்டுகிறது?

ப. அந்தச் சங்கத்தை தொழிலாளர்கள் நம்புகிறார்கள், மதிக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

பீ. வின்சண்ட்,
பெரிய வேர்க்கொலை,
டிக்கோயா

கே. மலையகத்தில் இன்று பலப் பல முன்னணிக் காளான்கள் தலையெடுக்கக் காரணமென்ன?

ப. சோஷலிஷத்தின் பெயரால் நேற்றுப்பெய்த விஷமழைதான் காரணம். நாளைப் பொழுதில் காளான்களின் கதி ஒரு கேள்விக் குறி!

ச. சிவமணி, அட்டன்.

கே. தோட்டத் தொழிலாளியின் வயிறு எப்போது நிறையும்?

ப. முழுச் சாப்பாட்டால் நிறையும். முழுச் சாப்பாட்டுக்கு முழுச் சம்பளம் தேவை. அதுதான் மாதச் சம்பளம்.

அ. கிருஷ்ணா, மாத்தளை.

கே. சிங்கள மொழி எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

ப. விஜயன் வந்து பல நூற்றாண்டுகளின் பின். முதலாவது சிங்களமொழி நூல் கி-பி. 10-ம் நூற்றாண்டில் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏ. இராணி, கே. துரைராஜ்,**
புசத்தன்னே, கம்பளே.

**கே.** தோட்டத் தொழிலாளியின் சம்பள உயர்வில் மட்டும் ஏன் இத்தனை சிக்கல்?...

**ப** தொழிற் சங்கங்களும், முதலாளிகள் சம்மேளனமும், அரசாங்கமும், காலத்துக்குக் காலம் தொழிலாளர் கழுத்தில் போடும் முடிச்சுகள்தான் காரணம். பாவம் ஏழைத் தொழிலாளிதான் அந்த முடிச்சுகளை அவிழ்க்க முடியாமல் திணறுகிறுன்.

இந்திரா துரைராஜ்,
மாபோலே, வத்தளை

**கே.** சிறிமா இந்தியாவின் பிரதமராக இருந்தால்?...

**ப** நடக்கிற காரியமா! சீன — மாவின் அதிகாரத்துள் ரஷ்யாவும், அமெரிக்காவும் வரமுடியுமா? அப்படி ஏதும் அற்புதம் நடந்தால்தான்... விளையாட்டுப் பிள்ளைகளின் காகித ஓடம் எங்கே; பேரரசுகளின் கடற்படை எங்கே; இரண்டையும் ஒப்பிட முடியுமா!

**கே.** உறவினருக்குச் சமமாகப் பிறத்தியர் இருப்பது ஏன்?
**ப.** நேர்மையும், பரிவும், மனிதர்களின் பொது இயல்புகள். கடமையும், கண்ணியமும், மனித உலகின் பண்புகள். உறவினர்கள் உறவைக் காக்கும் வகையில் கடமைகளைச் செய்வார்கள். பிறத்தியர் மனிதப் பண்பைக் காக்கும் வகையில் கடமைகளைப் புரிவார்கள். இந்தப் பண்பைக் கடைப்பிடிக்காத உறவினரும், பிறத்தியரும் சுயநலவாதிகளாகவே இருப்பார்கள். பிரதிபலனை எதிர்பார்த்து உதவுகிறவர்கள் சந்தர்ப்பவாதிகள். இவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கக்கூடாது.

மு. சதாசிவம்,
அலுவிகாரைத் தோட்டம்,
மாத்தளை.

**கே.** தோட்டத் தொழிலாளர்களை, மற்றவர்களுக்கு ஒளி கொடுத்துத் தம்மையே அழித்துக்கொள்ளும் மெழுகுவர்த்திக்கு ஒப்பிடலாமா அல்லது சுயநலத்திற்காகப் பொது நலத்தில் ஈடுபடும் அரசியல்வாதிகளுடன் ஒப்பிடலாமா?

**ப,** கூடாது. மெழுகுவர்த்தி ஒளியைக்கொடுத்துத்தானுகவே அழிகிறது அதனுடன் ஒளியும் மறைகிறது. தொழிலாளி உலகம் வாழ உழைப்பைக் கொடுத்து பிறர் வாழ்வில் ஒளி பிறக்கச் செய்கிறுன். அவன் உழைப்பு மறைந்து விடாமல் பலன் தருகிறது. இந்தத் தொழிலாளர்களை உலகத்திற்கு ஒளி கொடுத்து உயிர் காக்கும் சூரியனுக்கு ஒப்பிடலாம். சுயநலம் படைத்த அரசியல்வாதிகளுடனு தொழிலாளர்களை ஒப்பிடுவது. சுயநலவாத அரசியல்வாதிகள் எவரெடி, பெரக் பெட்டறி போன்றவர்கள். எந்த மின் விளக்கிலும் இவைகளைப் போடலாம்.

**கே.** தொழிலாளர் தமது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு எதைக் கடைப்பிடித்திட வேண்டும்?
**ப.** தொழிலாளர்களின் வாழ்க்கை முன்னேற்றமடையவேண்டுமானுல் போலிச் சுயநல அரசியல் கட்சிகளால் நடத்தப்படும் தொழிற்சங்கங்களிலிருந்து விடுதலை பெறவேண்டும். சிவப்புக் கொடியைக் காட்டிக் காட்டி தொழிலாளர் பெயரால் இன ஒழிப்புச் செய்யும் இந்த அரசியல் கட்சித் தொழிற் சங்கங்களால் மலையகத்துத் தொழிலாளிக்கு முன்னேற்றம் ஏற்பட முடியுமா!



வீ. எம். வீராசாமி,
நூக்குவத்தை, மஸ்கெலியா

**கே** நான் ஒரு தொடர் நாடகம் எழுதியுள்ளேன். அனுப்பி வைத்தால் பிரசுரிப்பீர்களா?
**ப.** மாவலி ஆசிரியருக்கு அனுப்பி வையுங்கள். அவர் அதைத் தீர்மானிப்பார்.

**கே.** மன்னுரிலிருந்து தலைமன்னுருக்குப் போகும் ரயிலில் விளக்கில்லையாமே. இது சதியா அல்லது விதியா?

**ப.** ரயிலில் விளக்கில்லாதது சதி. இல்லாத விளக்கில் வெளிச்சம் இல்லாதது விதி.

**கே. எஸ். நாதன்,**
**தலவாக்கொலை.**
**கே.** இலங்கைத் தீவிலே அமைச்சர் பதவிகளுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டதே ஏன்!
**ப.** மாண்பு என்பது என்ன, மதியூகம் என்பது என்ன என்று தெரியாதவர்களும், தாம் கண்களை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுவிடும் என்ற நினைப்பில் வாழுகிறவர்களும் அந்தப் பதவி நாற்காலிகளில் இருப்பதுதான்.

**கே.** தேவகுமாரசூரிய என்பது தமிழ்ப் பெயரா அல்லது சிங்களப் பெயரா?

**ப.** வடமொழிப் பெயர். தமிழ்ப் பெயரல்ல. இலங்கைத் தீவிலே தமிழ்ப்பெயரைப் போல் மேக்கப் போடும் தற்காலிக சிங்களப் பெயர்.

**பி. இராமன்,**
**அட்டன்**

**கே.** பணக்காரர்களைப் போல் சிலர் நடிக்கிருர்களே இதால் என்ன இலாபம்?
**ப.** பணக்காரர்களே பதவிக்காகவும் புகழுக்காகவும் தியாகிகளைப் போல நடிக்கும்போது சாதாரண பணக்காரர்களைப் போல சிலர் மட்டும்தானே நடிக்கிருர்கள் - பரவாயில்லை.

வீ. சந்திரன்,
கலகா

**கே.** காதலிப்பது கடமையா அல்லது கட்டாயமா?

**ப.** காதலிப்பது கடமையுமல்ல, கட்டாயமுமல்ல. எதையுமே காதலிக்கலாம். கடமைக்காகக் காதல் செய்வது நாய். கட்டாயத்திற்காகக் காதல் செய்வது பேய். இவைகளைப்போல் மனிதன் காதலை உபயோகிக்கலாமா!

**கே.** உலகிற் சிறந்த தலைவர் யார்?
**ப.** தலைவர்களுக்குச் சிறந்த உலகம் எதுவோ அதிலே இருக்கும் ஒருவர்.
**கே.** நீங்கள் நாத்திகரா அல்லது ஆத்திகரா?

**ப.** கடவுளிடம் நம்பிக்கையில்லாதவர்களை நாத்திகர் என்கிருர்கள். கடவுளை நம்புகிறவர்களை ஆத்திகர்கள் என்கிருர்கள். நான் கடவுளை கண்டதில்லை. ஆத்திகரும் நாத்திகரும் தங்கள் நம்பிக்கையை அவர்களின் கடவுளுக்கு அடவு வைத்து விட்டவர்கள். இவர்கள் இரு சாராருமே தன்னம்பிக்கை இல்லாதவர்கள். இவர்களில் ஒருவனுக இருக்க நான் விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கு வருகிறீர்களா ?

சுவையான சிற்றுண்டி பலகாரவகைகள், பகல் உணவு, தேநீர், கோப்பி, குளிர் பாணங்களுக்குச் சிறந்த இடம்

ஸ்ரீ சண்முகா லாட்ஜ்

180 கொழும்பு வீதி

க ண் டி.

மறக்காதீர்கள்!

சேவையும் சுவையும் தருவது

ஸ்ரீ சண்முகா லாட்ஜ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org